# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 செப்டம்பர் 16-30 தொகுதி 25 இதழ் 4

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


## இடைத்தேர்தல்கள்:

## தமிழ்நாட்டில் இடதுசாரி எழுச்சிக்கு கட்டியம் கூறுவதாக அமையட்டும்!



## செப்டம்பர் செய்தி: தமிழ்நாடு மீண்டும் இடது பக்கம்!

# இடைத் தேர்தல்: கம்யூனிஸ்ட் கட்சிகளின் வேட்பாளர்கள்




இடைத் தேர்தலில் இகக(மாலெ)விடுதலை, இகக(மா), இகக கட்சிகளின் சார்பாக மதுராந்தகம் தொகுதியில் இகக(மா) கட்சி மாநிலக்குழு உறுப்பினர் தோழர் பி.சுகந்தி தாராபுரம் தொகுதியில் இகக மாநிலக்குழு உறுப்பினர் லட்சுமணன் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளார்கள். அவர்கள் இருவருக்கும் அந்தத் தொகுதிகளின் மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்து ஜனநாயகத்தைக் காப்பாற்றிடக் கேட்டுக் கொள்கிறோம்.




தாராபுரம் தொகுதியில் சிபிஐ(எம்எல்)லிபரேசன் கட்சியின் ஊழியர் கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் வீ.சங்கர், தமிழ்நாடு மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, மாநில நிலைக்குழு உறுப்பினர்கள் பாலசுப்பிரமணியன், கோவிந்தராஜ், மாநிலக்குழு உறுப்பினர்கள் வேல்முருகன், பிலோமினா, முத்துக்கிருஷ்ணன், மீனாட்சிசுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மாலை தீப்பொறி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் குழுவின்**
**அரசியல் ஏடு**

இருவார இதழ்
*2026 செப்டம்பர் 16-30*
*தொகுதி 25 இதழ் 4*

முதன்மை ஆசிரியர்
சங்கர்.வீ

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர் குழு
பழ.ஆசைத்தம்பி
பாலசுந்தரம்
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

மேலாளர்
சொ. இரணியப்பன்

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com


## எது சேவை? எது நீதி? யாருக்கு நீதி?

தஞ்சாவூர் சாஸ்திரா பல்கலைக்கழகம், தமிழ்நாடு அரசு திறந்த வெளிச் சிறைக்காக ஒதுக்கி வைத்திருந்த 31.37 ஏக்கர் நிலத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்து வைத்திருந்தாலும், அவர்கள் கல்விச் சேவை புரிவதால், தமிழ்நாடு அரசு அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ள இடத்திற்குப்பதிலாக, அவர்கள் தரும் வேறு இடத்தை அரசு ஏன் பெற்றுக் கொள்ளக் கூடாது என உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சூர்யகாந்த் மிஸ்ரா தலைமையிலான அமர்வு தமிழ்நாடு அரசைப் பார்த்து கேட்கிறது. காசுள்ளவர், காவிக்கு நெருக்கமானவர் என்றால் உச்ச! நீதிமன்றத்தின் தராசு கூட தலை கீழாகத் தொங்கும் போல.

சட்ட விரோதமாக வம்படியாக அரசினுடைய நிலத்தை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு, 40 ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு நீதிமன்றமாக வழக்கை இழுத்தடித்து வந்தது சாஸ்திரா. இந்த நிலையில், சென்னை உயர் நீதிமன்றம் ஆக்கிரமித்து வைத்துள்ள நிலத்தை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் இல்லையென்றால் காவல்துறை உதவியுடன் அரசு அதை மீட்க வேண்டும் என்று 9.1.2026ல் உத்தரவிட்டது. அந்த உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது சாஸ்திரா பல்கலைக்கழகம். சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்த உச்ச நீதிமன்றம் அரசு நிலத்தை அடாவடியாக ஆக்கிரமித்தது குற்றம் என்று சொல்லவில்லை. மாறாக, அந்த இடத்திற்குப் பதிலாக அவர்கள் தரும் மாற்று இடத்தை பரிசீலிக்கச் சொல்லியுள்ளது.

ஆனால், கடந்த 2022 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில், இப்போது உச்ச நீதிமன்றத்தில் சொன்னதுபோல் தாங்கள் கல்விச் சேவை புரிவதாக சாஸ்திரா பல்கலைக் கழகம் சொன்னதற்கு, சென்னை உயர்நீதிமன்றம், “எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும், பொதுச் சேவை செய்வதாகக் கூறிக்கொள்ளும் இந்த எதிர்மனுதாரர்கள், பொதுமக்களுக்குப் பெரும் தீங்கை இழைத்துள்ளனர். இந்த வழக்கில், எதிர்மனுதாரர்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு நயா பைசா கூட செலுத்தாமல், 20.62 ஏக்கர் அரசு நிலத்தை அனுபவித்து வந்துள்ளனர்.” என்று சொன்னது. ஆனால், தலைமை நீதிபதி சூர்யகாந்த் அவர்கள் அமர்வு இதையெல்லாம் கண்டுகொள்ளவேயில்லை. இவர்கள் யாருக்கான நீதியைப் பேசுகிறார்கள். ஏழை மக்கள், அரசுக்குச் சொந்தமான இடத்தில் குடியிருக்கிறார்கள் என்பதற்காக, அவர்கள் பல ஆண்டுகளாக குடியிருந்து வந்திருந்தாலும் அந்த மக்களின் வாழ்விடங்களை புல்டோசர்கள் கொண்டு அழித்து, அநியாயத்திற்கு அந்த மக்களை நடுவீதியில் நிர்கதியற்றவர்களாகச் செய்யும் இதே உச்ச நீதிமன்றம், சாஸ்திரா பல்கலைக் கழகத்திற்காக அரசை விட்டுக் கொடுக்கச் சொல்கிறது.

பரம்பரை பரம்பரையாக, வனங்களில் வாழும் பழங்குடி மக்களை, துணை இராணுவத்தையும் காவல்துறையையும் கொண்டு அவர்களது வாழ்விடங்களில் இருந்து விரட்டியடிக்க உத்தரவிடும் உச்சநீதிமன்றம், தமிழ்நாட்டில் மேக மலைப் பகுதியில் காலங்காலமாக வாழும் மக்களை அவ்வாறு விரட்டியடிக்க உத்தரவிட்டுள்ள உச்சநீதிமன்றம், சாஸ்திரா பல்கலைக் கழகம் பல ஆண்டுகளாக கல்விச் சேவை புரிந்து வருவதால், அந்த இடத்திற்குப் பதில் மாற்று இடத்தைப் பெற்றுக் கொண்டால் என்ன என்று கேட்கிறது. சட்டவிரோதமாக நாற்பது ஆண்டுகளாக அரசின் நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருந்தாலும் அவர் கல்விச் சேவை! செய்து வருகிறாராம். குற்றவாளி இல்லையாம். ஆனால், ஆண்டாண்டு காலமாக மலைப் பகுதியில் குடியிருந்து வருபவர்கள் குற்றவாளிகளாம். அவர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டியவர்களாம். எப்படி இருக்கிறது இவர்களுடைய நீதி!

பாபர் மசூதியை இடித்தார்கள். ராமர் பிறந்த இடம் என்று கதைத்தார்கள். கடைசியில் இதே போன்றுதான் உச்ச நீதிமன்றம் சொன்னது. பாபர் மசூதி இருந்த இடத்தை ராமர் கோயிலுக்குக் கொடுத்துவிடுங்கள். அவர்கள் தரும் மாற்று இடத்தில் நீங்கள் மசூதியைக் கட்டிக் கொள்ளுங்கள் என்று. ராமர் பிறந்த இடம் என்கிற பொதுப் புத்திக்காக அவ்விடத்தை விட்டுக் கொடுக்கலாமே என்று இஸ்லாமியரிடம் சொன்ன உச்சநீதிமன்றம், இப்போது கட்டணக்கொள்ளை வாயிலாக கல்விச் சேவை செய்து கொண்டிருக்கும் சாஸ்திரா பல்கலைக் கழகத்திற்கு அரசையே விட்டுக் கொடுக்கச் சொல்கிறது.

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் இப் பரிந்துரையை ஏற்றுக் கொள்ளமாட்டோம்

தொடர்ச்சி 5 ம் பக்கம்...

# சுதந்திர இந்தியாவின் மிகப்பெரிய மோசடிக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் பொறுப்பாக்கப்பட வேண்டும்

2025 பீகார் தேர்தலுக்கு முன்னதாக தொடங்கப்பட்ட, வாக்காளர் பட்டியலின் தேர்தலுக்கு முந்தைய மறுசீராய்வு, இந்தியாவின் மிகவும் அதிர்ச்சியளிக்கும் வாக்காளர் நீக்க இயக்கமாக இப்போது உருவெடுத்துள்ளது. பீகார் நடவடிக்கைக்குப் பிறகு சுமார் ஓராண்டுக்குள், 2024 மக்களவைத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலிலிருந்து சுமார் 13 கோடி வாக்காளர்களை இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த (எஸ்ஐஆர்) நடவடிக்கை நீக்கியுள்ளது. 2024 தேர்தல் முடிவுகள் பாஜகவின் (தேர்தல்) கணக்குகளைத் தெளிவாகவே தவிடுபொடியாக்கின; எனவே, அனைத்துக் கணக்குகளையும் தவிடுபொடியாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டத்துடன் இந்த ஆட்சி இப்போது பதிலடி கொடுத்துள்ளது. பீகாரில், ஆதார் அட்டையைச் செல்லுபடியாகும் அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்ளும்படி தேர்தல் ஆணையத்தை உச்ச நீதிமன்றம் கட்டாயப்படுத்தியது; ஆனால் எஸ்ஐஆர் நடவடிக்கை மேற்கு வங்கத்திற்கு வந்தபோது, எந்தவொரு ஆவணத்தையும் கேள்விக்குட்படுத்தி செல்லாததாக்கக்கூடிய தர்க்க முரண்பாடு எனப்படும் கணிக்க முடியாத ஒரு பிழையைத் தேர்தல் ஆணையம் கண்டுபிடித்திருந்தது.

எஸ்ஐஆர்-இன் மிகப்பெரிய வடிவமைப்புக் கோளாறே, அது எந்தவொரு தவறையும் ஏற்க மறுப்பதுதான். ஒவ்வொரு புள்ளிவிவர நடவடிக்கையும் மனிதத் தவறுகளுக்கான சாத்தியத்தை ஏற்றுக்கொள்கிறது; தவறுகளைத் திருத்தும் வழிமுறைகளையும் வழங்குகிறது. ஆனால் எஸ்ஐஆர்-ஐப் பொறுத்தவரை, தவறுதலாக நீக்கப்பட்ட ஒவ்வொரு வாக்காளரையும் முதல்முறை வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான படிவம் 6-ஐப் பயன்படுத்திப் புதிதாக விண்ணப்பிக்குமாறு தேர்தல் ஆணையம் கேட்கிறது. உச்ச நீதிமன்றத் தலையீடு மேற்கு வங்கத்தில் தீர்ப்பாயங்கள் என்ற ஒரு வழிமுறையை உருவாக்கியது; ஆனால் அந்தச் செயல்முறை மிகவும் வெளிப்படைத்தன்மையற்றதாகவும் மந்தமானதாகவும் இருப்பதால், மாநிலத்தில் அமைக்கப்பட்ட பத்தொன்பது தீர்ப்பாயங்களால் மொத்தமுள்ள சுமார் 40 லட்சத்தில் 1,00,000 மேல்முறையீடுகளுக்குக் கூட இன்றுவரையிலும் தீர்வு காணப்படவில்லை. இதுவரை பரிசீலிக்கப்பட்ட மேல்முறையீடுகளில் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட முறையீடுகளில் தீர்ப்பாயங்கள் சாதகமான தீர்ப்பை வழங்கியுள்ளன என்று நமக்குச் சொல்லப்படுகிறது. ஆனால் தீர்ப்பாயங்களில் நிலுவையில் உள்ள சுமார் 30 லட்சம் மேல்முறையீடுகள், உண்மையில் மேலும் வாக்காளர்களை நீக்குவதற்கான மேல்முறையீடுகள்தான் என்றும் தெரியவந்துள்ளது! வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வாக்களிக்கும் உரிமையை மீட்டெடுப்பதற்கான மேல்முறையீட்டு வழிமுறை முற்றிலுமாக முடக்கப்பட்டுள்ளது அல்லது காலவரையின்றித் தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

நீக்கப்படும் வாக்காளர்களின் எண்ணிக்கை, வெற்றி வித்தியாசத்தை விட அதிகமாக இருக்கும் பட்சத்தில், எஸ்ஐஆர் நடவடிக்கையால் தேர்தல் முடிவுகள் பாதிக்கப்படுவதற்கும் முடிவுகள் தலைகீழாக மாறுவதற்குமான சாத்தியக்கூறுகளை உச்ச நீதிமன்றம் அனுமான ரீதியாக ஏற்றுக்கொண்டிருந்தது. இதுபோன்ற முறைகேடுகளை உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரித்து மறுவாக்குப்பதிவுக்கு உத்தரவிட்டிருந்தால், மகாராஷ்டிரா, பீகார், மேற்கு வங்கத்தில் நாம் ஏற்கனவே பல மறுவாக்குப்பதிவுகளைக் கண்டிருப்போம். வாக்காளர் நீக்க நடவடிக்கைகளால் மட்டுமல்லாமல், மோசடியான அல்லது நியாயமற்ற முறையில் பெயர்களைச் சேர்ப்பதாலும் தேர்தல் முடிவுகள் பாதிக்கப்படுகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தீவிரத் தணிக்கைகளும் தேர்தலுக்குப் பிந்தைய வாக்காளர் பட்டியல்களின் நேரடிச் சரிபார்ப்புகளும் சந்தேகத்திற்குரிய முறையில் கணிசமான வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளதைத் தெரியப்படுத்தியிருக்கின்றன. எஸ்ஐஆர் செயல்முறையைப் பொறுத்தவரை உச்ச நீதிமன்றம் தேர்தல் ஆணையத்தை சுதந்திரமாக செயல்பட அனுமதித்துள்ளதால், இந்தியாவில் தேர்தல் ஜனநாயகம் முற்றிலும் வெளிப்படைத்தன்மையற்ற, மோசடியான செயல்பாடுகளுக்கு நிரந்தரமாக இரையாகியுள்ளது.

2024-க்குப் பிறகான ஒவ்வொரு தேர்தலும் இந்த திட்டமிட்ட வகையிலான தேர்தல் முறைகேட்டிற்கு உட்பட்டுள்ளது. எஸ்ஐஆர் முறையாகத் தொடங்கப்படுவதற்கு முன்பே, படிவம் 7-ஐச் சமர்ப்பிப்பது தொடர்பாகத் தேர்தல் ஆணையம் ஒரு முக்கியமான மாற்றத்தைச் செய்தது. வாக்குச்சாவடிகளின் அடிப்படையில் வாக்காளர் பட்டியல் அமைக்கப்பட்டிருந்தாலும் ஒரு சட்டமன்றத் தொகுதியில் உள்ள எந்தவொரு வாக்காளரும் தனது வாக்குச்சாவடியில் மட்டுமல்லாமல் அதே சட்டமன்றத் தொகுதியின் எந்தவொரு வாக்குச்சாவடியிலும் வாக்காளர்கள் இருப்பதையோ அல்லது சேர்க்கப்படுவதையோ எந்த எண்ணிக்கையிலும் எதிர்க்கலாம். ஒரு குறிப்பிட்ட வாக்குச்சாவடியிலிருந்து ஒட்டுமொத்தத் தொகுதிக்கும் புகாரின் வரம்பை விரிவுபடுத்தியதன் மூலம், படிவம் 7-ஐப் பேரளவில் ஆயுதமாக்குவதற்குத் தேர்தல் ஆணையம் வழிவகுத்தது. எதிர்க்கட்சிகளுக்கு வாக்களிக்கக்கூடியவர்கள், குறிப்பாக, முஸ்லீம் சமூகத்தினரையும் பல்வேறு விளிம்புநிலைப் பிரிவினரையும் குறிவைக்க பாஜக இதனை முழுமையாகப் பயன்படுத்தி வருகிறது. நிறுவப்பட்ட சட்ட விதிகளின்படி, பெயர் நீக்கப் புகார் அல்லது மேல்முறையீட்டை எதிர்கொள்ளும்

ஒவ்வொரு வாக்காளரும் இது குறித்த அறிவிப்பைப் பெறுவதற்கும் தன்னைத் தற்காத்துக்கொள்வதற்கான வாய்ப்பைப் பெறுவதற்கும் உரிமை உள்ளவர்கள் என்றாலும் இந்த முறையான சட்டச் செயல்முறையைப் பின்பற்றாமல் கோடிக்கணக்கான வாக்காளர்கள் நீக்கப்படுகின்றனர். இத்தகைய மீறல்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்திடமிருந்து இதுவரை எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை.

உத்தரப் பிரதேசம், பஞ்சாப், உத்தராகண்ட், கோவா, மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் வரவிருக்கும் முக்கிய சட்டமன்றத் தேர்தல்களுக்கு முன்னதாக, இந்தியா இந்த எஸ்ஐஆர் மோசடியின் ஆணிவேரைக் கண்டறிய வேண்டும். எஸ்ஐஆர் என்ற பெயரில் வாக்காளர் பட்டியலில் தொடர்ந்து நடந்து வரும் தில்லுமுல்லுகளுக்காக இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மீதான கிரிமினல் குற்றச்சாட்டை முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.ஒய். குரேஷி வலுவாக முன்வைத்துள்ளார். வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மாணவர்களால் அரசாங்கத்தைப் பின்வாங்கும்படி நிர்ப்பந்திக்க முடியும் என்றால், மக்களின் உறுதியான, ஒன்றுபட்ட எதிர்ப்பால் எஸ்ஐஆர் நடவடிக்கையையும் தடுத்து நிறுத்த முடியும். திரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல், இந்தியாவின் தேர்தல் அமைப்பை நிரந்தரமாகக் கைப்பற்றுவதற்கும் ஜனநாயகத்தை அப்பட்டமாகச் சீர்குலைப்பதற்கும் வழிவகுக்கும். நியாயமற்ற முறையில் நீக்கப்படும் ஒவ்வொரு வாக்காளருக்கும் தேர்தல் ஆணையத்தை உச்ச நீதிமன்றம் பொறுப்பாக்க வேண்டும்; மேலும், நீக்கப்பட்ட அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் பட்டியலில் மீண்டும் இணைக்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பை உறுதிசெய்வதோடு, அவர்களின் மேல்முறையீடுகள் நிலுவையில் இருக்கும்போது வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதையும் உறுதிசெய்ய வேண்டும். வாக்களிக்கும் உரிமையின் மீதான இந்த ஒருங்கிணைந்த தாக்குதல், தேர்தல் ஜனநாயகத்தின் அடித்தளத்தையே அடித்து நொறுக்குகிறது. மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கும் தேர்தல் செயல்முறையைக் கைப்பற்றுவதற்குமான இந்த திட்டமிட்ட வகையிலான முயற்சியை எதிர்த்து நாடு முழுவதும் உள்ள குடிமக்கள் ஓரணியில் திரண்டு எதிர்த்துப் போராட வேண்டும் என்பதையே ஜனநாயக உரிமைகளின் அதிகரித்துவரும் பாதுகாப்பற்ற தன்மை கோருகிறது.❑

**தமிழாக்கம் – விஜி**

**எம்எல் அப்டேட் - தலையங்கம் 15 – 30 செப். 2026**

**தலையங்கம் தொடர்ச்சி...**

என்று தவெக அரசு சொல்லுமா?. அரசின் வசம் இருக்கிற சென்னை விமான நிலைய நிர்வாகத்தை தனியாரிடம் ஒப்படைக்கச் சொல்லி பிரதமர் மோடிக்கு ரகசியக் கடிதம் எழுதியவராச்சே தமிழக முதல்வர் விஜய். ஜி.எம். ஆர் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் முதல்வர் விஜயை வந்து பார்த்துவிட்டு சென்றபின்னர்தான் இந்த கடிதம் எழுதப்பட்டதாக செய்திகள் சொல்கின்றன. அதேபோல், ஜாய் அலுக்காஸ் நிறுவனத்தார் விஜயை வந்து பார்த்துவிட்டுச் சென்ற பின்னர்தான் தாய் மாமன் தங்க மோதிரத் திட்ட அமுலாக்கம் அறிவிக்கப்பட்டு, மோதிரம் செய்வதற்கு அந்நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டிருக்கிறது விஜய் அரசு. இந்தியாவில் உள்ள நிறுவனங்களை லண்டனுக்கு அழைத்துச் சென்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போட காலியாக இருப்பதாகச் சொல்லும் அரசு கஜானாவிலிருந்து ஆறேழு கோடிகள் செலவு செய்தவர் திரு.விஜய். இவ்வாறு கார்ப்பரேட் கம்பெனிகளுக்காகவே நாளும் பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிற விஜயின் அரசு, சாஸ்திரா பல்கலைக் கழகத்திற்கு எதிராகப் பேசுமா?

தமிழ்நாட்டில் பெரும்பான்மையான தனியார் பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள் எல்லாம் நீர் நிலைகளை, அரசு நிலங்களை ஆக்கிரமித்துதான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தவெக அமைச்சரவையில் உள்ளவர்களும்கூட அவ்வாறுதான் தங்கள் கல்விச் சேவையை! செய்து கொண்டிருக்கிறார்கள். சட்டப் பேரவை கூட்டத் தொடரின் கடைசி நாளில் தனியார் கல்வி நிறுவனங்களை அதிகரிக்க சட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட சூழலில், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சாஸ்திராவுக்கு சாதகமாகப் பேசியிருப்பதானது இந்த கல்வி வியாபாரிகளுக்கு நல்ல கொண்டாட்டமாகிவிடும். பட்டினப்பாக்கத்தில் மீனவர் வாழ்க்கையை அழித்து அங்கு ரூ.1200 கோடியில் புதிய தலைமைச் செயலகமும் சட்டப்பேரவையும் கட்டுவதற்கு அரசாணை வெளியிட்டுள்ளது தவெக அரசு. ஆட்சிக்கு வந்த நான்கு மாதத்திலேயே, புதிய தலைமைச் செயலகம் கட்ட அக்கறை காட்டுகிறார் என்றால், அதனால் உண்மையில் பயனடையப் போவது யார்? நாளை, எங்கள் வாழ்க்கை பறிபோகிறது என்று இந்த மீனவர்கள் எந்த நம்பிக்கையில் இந்திய உச்சநீதிமன்றத்தை நாட முடியும். ஆகையால், இதுபோன்ற புதிய! நீதிக்கு எதிராக மக்கள் பேச வேண்டும். இல்லையென்றால், நீதி என்பதற்கு பொருள் இல்லாமல் போய்விடும். "…..வேறொரு நீதி சாத்திரம் சொல்லிடுமாயின் – அது சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்"! என்று சுப்ரமணியப் பாரதியார் சொன்னதுபோல் இங்கே சதி நடப்பது தெளிவாகத் தெரிகிறது.❑



**கரூரில் நடந்த தூய்மைப் பணியாளர் முற்றுகைப் போராட்டமும் பேச்சுவார்த்தையும்**



# இடைத் தேர்தல்கள்:

# தமிழ்நாட்டில் இடதுசாரி எழுச்சிக்கு கட்டியம் கூறுவதாக அமையட்டும்!

சங்கர்.வீ

### இடைத் தேர்தல்:

### தவெக நடத்திய ஜனநாயகப் படுகொலையின் விளைவு

தமிழ்நாட்டில் தற்போது மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கு நடக்கும் இடைத்தேர்தல் இயல்பானது அல்ல. திட்டமிட்டு மக்கள் மீது திணிக்கப்பட்டது. பெரும்பான்மை பெறாத தவெக தனது சட்டமன்றப் பெரும்பான்மையை எட்டுவதற்காக அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, ஜனநாயகப் படுகொலை செய்ததன் ஒரு பகுதியாக விளைந்ததுதான் இந்த இடைத் தேர்தல்கள். முதலமைச்சர் விஜய் ராஜினாமா செய்த திருச்சி கிழக்கு தொகுதி தவிர, முன்னாள் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெயக்குமார் (பெருந்துறை), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்), சி.விஜய பாஸ்கர் (விராலிமலை), எம். ஆர். விஜய பாஸ்கர் (கரூர்) ஆகியோரும் தவெகவில் இணைவதற்காக ராஜினாமா செய்த அந்தத் தொகுதிகளுக்கு இன்னும் இடைத் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. அந்தத் தொகுதிகளில் வெற்றி குறித்தே வழக்குகள் இருப்பதால் சென்னை உயர் நீதிமன்றம் அத் தொகுதிகளுக்கு தேர்தல் நடத்த இடைக்கால தடை விதித்துள்ளது.

ஏற்கனவே அதிமுக சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று, வேண்டுமென்றே ராஜினாமா செய்த அதே சட்டமன்ற உறுப்பினர்களை தவெக வேட்பாளர்களாக நிறுத்தி இருப்பது, இது ஒரு ஜனநாயகப் படுகொலை என்பதை உறுதி செய்கிறது. டாஸ்மாக் ஊழியர்கள் உள்ளிட்ட, குறைந்தபட்ச ஊதியம் கூட கிடைக்காமல் போன கடைநிலை ஊழியர்கள் குறித்த விசயத்தில் அவர்களை பணி இடை நீக்கம் செய்து ஊழலுக்கு எதிரானவராக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தவெக, மேல்மட்ட ஊழல்கள், கார்ப்பரேட் ஊழல்கள், ஊழல் மூலம் நடக்கும் ஜனநாயகப் படுகொலைகள் ஆகியவற்றைப் பற்றி வாய் திறக்க மறுக்கிறது. இப்படிப்பட்ட பின்னணியில் நடக்கும் இந்தத் தேர்தலில், அதிமுகவின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களான இந்நாள் தவெக வேட்பாளர்களை அந்தத் தொகுதி மக்கள் தோற்கடித்திட வேண்டும். அது ஒரு முக்கியமான ஜனநாயகக் கடமை.

### பொய்த்துப் போன, நீர்த்துப் போன வாக்குறுதிகள்

தவெக அரசின் மக்கள் விரோத செயல்பாடுகள் இந்த இடைத் தேர்தலில் அம்பலப்படுத்தப்பட வேண்டும். தொழிலாளர் விரோத பிஜேபியின் தொகுப்புச் சட்டங்களுக்கு சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்ற திமுக அரசு தயாராக இருக்கவில்லை. ஆனால், குறைந்தபட்சம் அதை நடைமுறைப் படுத்துவதை தள்ளிப் போடும் நோக்கில், அறிவிக்கப்பட்ட மாநில நகல் விதிகளை இறுதிப்படுத்தாமல் தள்ளி வைத்தனர். தேர்தல் காரணமாக கூட இருக்கலாம். திமுக தற்காலிகமாக நிறுத்தி வைத்த பணியை தற்போது தன் சிரம்மேல் ஏற்று தவெக துவங்கி இருக்கிறது. தொழிலாளர் அடிமைச் சட்டங்களை நிறைவேற்ற மாநில விதிகள் உருவாக்க முயற்சிப்பதன் மூலம் பிஜேபி–அதிமுக–திமுகவைப் போலவே தாமும் கார்ப்பரேட் சேவகர்கள்தான் என்பதை நிரூபிக்கிறார்கள்.

கிராமப்புற மக்களிடமிருந்து நூறு நாள் வேலை உரிமையைத் தட்டிப் பறிக்கும் மோடி அரசுக்கு எதிராக தவெக எதுவும் பேசவில்லை என்பது மட்டுமல்ல, அதற்குப் போதுமான நிதியை மோடி அரசைப் போலவே, தவெக அரசும் ஒதுக்கவில்லை. அதை நகர்ப்புறங்களுக்கும் விரிவுபடுத்திட வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றாகி விட்டது.

சமூக நீதி என்ற பெயரில் துறை மட்டும் இருக்கிறதே தவிர பஞ்சமி நில மீட்பு பற்றி, வழக்கமான செயல்படா ஆணைய அறிவிப்பு தவிர வேறு எந்த தீவிர முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. தேர்தல் வாக்குறுதியான விவசாயிகள் கடன் தள்ளுபடியும் கண்துடைப்பாக முடிந்து போய்விட்டது.

தூய்மைப் பணியாளர்கள் பணிநிரந்தரம் கேட்டுப் போராடிக் கொண்டிருக்கும்போது, அந்தப் பணிகளை தமிழ்நாட்டின் எல்லா மாநகராட்சிகளிலும் தனியாரிடம் கொடுப்பது என அரசாணை வெளியிட்டு, பின்னர் உழைப்போர் உரிமை இயக்கம் – ஏஐசிசிடியு உள்ளிட்ட சங்கங்கள் போராடியதால் அது கைவிடப்பட்டது. சமீபத்தில் நடந்த தூய்மைப் பணியாளர் போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலிப்பதாகச் சொல்லும் தவெக அரசாங்கம், சென்னை மாநகராட்சியில் வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியத்தை மாநிலம் முழுவதும் வழங்குவோம் என அறிவிக்கத் தயாராக இல்லை.

பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால், கேலிக்கூத்து என்னவென்றால், அந்த நிலம் தொழில்துறைக்கு, சிப்காட்டுக்கு பயன்படுத்தப்படுமே தவிர அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு திருப்பி அளிக்கப்பட மாட்டாது என்பதுதான். விமான நிலையத் திட்டம்

கைவிடப்பட்டதனால், பரந்தூர் மக்களுக்கு பயன் ஏதுமில்லை.

மீனவர்கள் வாழ்வாதாரத்தைப் பறித்து பட்டினப்பாக்கத்தில் புதிய சட்டமன்றம் கட்ட அரசாணை வெளியிடப்பட்டு இருக்கிறது.

5 ஆண்டு பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு பணி நிரந்தரம், காலி இடங்களை நிரப்புவது, ரூ. 4000 வேலையில்லா நிவாரணம், பெண்களுக்கு மாதம் ரூ 2500 உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

பெருமையாக அறிவிக்கப்பட்ட பெண்களுக்கான கட்டணமில்லா மாநிலப் பயணத் திட்டம் நீர்த்துப் போகச் செய்யப்பட்டிருக்கிறது. மாதத்திற்கு 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் என்று வாக்குறுதி அளித்துவிட்டு, 100 யூனிட் ஆக குறைத்தது போல, (2 மாதத்திற்குத்தான் 200 யூனிட்) ஆறு சிலிண்டர் மூன்றாக குறைந்து அதுவும் எப்போது வரும் என்று தெரியவில்லை.

இத்தகைய பின்னணியில் நடக்கும் இடைத் தேர்தல்களில் தவெக அரசின் வெற்று வாக்குறுதிகளை அம்பலப்படுத்தி, அதை நிறைவேற்றக் கோரி போராடுவதற்கு மக்களை தயார் செய்வதை முக்கிய நிகழ்ச்சி நிரலாக மாற்றிட வேண்டும்.

ஒன்றரை டிரில்லியன் டாலர் பொருளாதாரம் பற்றி பேசி, கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சலுகைகளை வாரி வழங்கத் தயாராக இருக்கும் தவெக அரசாங்கம் உழைக்கும் மக்கள் உரிமைகளைப் புறக்கணிக்கிறது.

**எழுந்துவரும் இடதுசாரிகள்**

தமிழ்நாட்டு தேர்தல் அரசியல் வரலாற்றில், 1962க்குப் பிறகு, சுமார் 63 ஆண்டுகளுக்குப் பிறகு, முதன் முறையாக கம்யூனிஸ்டுகள் 2026ல் மதுராந்தகம், தாராபுரம் இடைத் தேர்தல்களில் தனித்துக் களம் காண்கிறார்கள். 2016ல் மக்கள் நல கூட்டணி என்ற பெயரில் விசிக, மதிமுக, தேமுதிகவோடு இணைந்து திமுக – அதிமுகவுக்கு மாற்றணி என்கிற பெயரில் மூன்றாவது அணியாக போட்டியிட்டாலும், அது ஒரு மூன்றாவது அணிதானே தவிர இடதுசாரி அணி அல்ல.

இம்முறை 2026ல், சிபிஐ, சிபிஐஎம், சிபிஐ எம் – எல் லிபரேசன் இணைந்து தமிழ்நாட்டில் முதல் முறையாக உருவாக்கப்பட்ட இடதுசாரி ஒருங்கிணைப்பின் சார்பில் இரு தொகுதிகளிலும் இடதுசாரி வேட்பாளர்கள் தனித்துப் போட்டி யிடுகிறார்கள். இது தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் சிறப்பு மிக்க, இடதுசாரிகளின் அரசியல் செயல் தந்திரத்தின் குறிப்பிடத் தக்க நிகழ்வாகும்.

கேரளத்தில், மேற்கு வங்கத்தில், திரிபுராவில் பல்லாண்டுகாலமாக செயல்பட்டு வந்த இடது ஜனநாயக முன்னணி, இடது முன்னணி ஆகியவற்றிலிருந்து தமிழ்நாட்டு இடது ஒருங்கி ணைப்பு மாறுபட்டது. ஏனென்றால், இது ஒரு முன்னணி அல்ல, ஓர் ஒருங்கிணைப்பு. இதில் சிபிஐ, சிபிஐஎம் கட்சிகளோடு, சிபிஐ(எம்எல்)லிபரேசனும் இணைந்திருக்கிறது. போராட்ட ஒருங்கிணைப்புக் குழு தற்போது அதன் நீட்சியாக இடைத் தேர்தலில் போட்டியிடுகிறது. அகில இந்திய அளவில், அத்தகைய ஒருங்கிணைந்த செயல்பாடு இருக்கிறது என்றாலும், மேற்கு வங்கத்தில் கடந்த முறை சேர்ந்து தேர்தல் களம் கண்டிருக்கிறோம் என்றாலும், தமிழ்நாட்டில் உருவாகி இருக்கும் இடது ஒருங்கிணைப்பு, ஒரு நீண்டகால பார்வையையும் ஓர் இடதுசாரி மாற்றணியாக தமிழ் நாட்டில் பரிணமிப்பதையும் நோக்கமாகக் கொண்டது. போராட்ட ஒருங்கிணைப்புக்குழுவாக மட்டுமே உருவான அணி, இந்த இடைத் தேர்தல்களில் தேர்தல் அணியாகவும் பரிணமித்திருப்பது ஒரு குறிப்பிடத்தக்க அரசியல் நிகழ்வாகும். இடதுசாரி வேட்பாளர்களை சிபிஐஎம்எல் ஆதரிக்கிறது. வெற்றிக்காகப் பாடுபடுகிறது.

சிபிஐ, சிபிஐஎம் கட்சிகள், தவெக அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் அதே வேளை, தேர்தலில் இடது ஒருங்கிணைப்பின் சார்பாக களம் காண்பது, திமுக – அதிமுக – பிஜேபிக்கு மட்டுமல்ல, தவெகவுக்கும் இடதுசாரிகளே ஒரே மாற்று எனக் காட்டும் விதத்தில் தேர்தல் களம் காண்பது தமிழ்நாட்டு இடதுசாரி அரசியலில் ஒரு முக்கிய திருப்பம் ஆகும்.

**சில விவாதங்கள்**

இதனை அனைத்து தரப்பினரும், குறிப்பாக இடதுசாரி தொண்டர்கள், இடதுசாரி அரசியலின்பால் அக்கறை கொண்ட ஜனநாயக சக்திகள் உட்பட, வரவேற்கின்றனர். ஆனாலும், இடதுசாரிகள் வாக்குகளைப் பிரித்து விடக் கூடாது என்று பயந்து தேர்தல் களத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என சிலர் ஆலோசனை வழங்குகின்றனர். தமிழ்நாட்டின் தலைவிதியை, தமிழ்நாட்டின் முகத்தை மாற்றியமைக்கும் திறன் படைத்த ஒரே அரசியல் இடதுசாரி அரசியல் தான் என நன்றாகத் தெரிந்தும் அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். தவெகவை வீழ்த்த, திமுகவையோ அதிமுகவையோ தேர்தலை தவிர்க்க அவர்கள் அறிவுரை வழங்கவில்லை. இடதுசாரிகள் மட்டும் விலக வேண்டும் என்கிறார்கள்.

எவ்வளவு வாக்குகள் பெற்றிட முடியும் என்கின்றனர். வாக்குகள் என்னவாக இருப்பினும் தமிழ் நாட்டின் சமூக, பொருளாதார, கலாச்சார பாதை குறித்த ஒரு மாற்றுப் பார்வை கொண்ட கம்யூனிஸ்டுகள், அதில் என்னதான் நிறை–குறைகள் இருப்பினும், தனித்து ஒரு மாற்றணியாக உருவெடுக்க முயல்வதை ஊக்குவிக்க வேண்டுமே தவிர அதற்கு எதிராகப் பேசுவது கார்ப்பரேட் ஆதரவு, மதவெறி ஆதரவு சக்திகளைத்தான் ஊக்குவிப்பதாக இருக்கும்.

தவெக பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்து விடும் என நம்பியவர்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத்தான் பரிசாகத் தந்திருக்கிறது. பிஜேபியை எதிர்த்து வரும் ஒரு மெல்லிய குரல் கூட சட்டப்பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திமுக– அதிமுக– பிஜேபியின் அதே நவதாராளவாதக் கொள்கைகளைத்தான் தவெகவும் பின்பற்றுகிறது என்பதை அதன் 2026

பட்ஜெட் வெளிச்சமிட்டுக் காட்டியிருக்கிறது. நடந்து முடிந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட கல்வி தனியார்மயமாக்க மசோதா அதை உறுதிப்படுத்துகிறது. நவதாராளவாதக் கொள்கைகளும் தனியார்மயமாக்கமும் அவுட்சோர்சிங், தொழில் முறைமையகற்றல் (இன்ஃபார்மலைசேசன்) ஆகியன மதவெறி ஆதிக்க, கார்ப்பரேட் ஆதிக்க, சாதிவெறி ஆதிக்க அரசியலுக்கு வலுசேர்ப்பனவே தவிர வேறேதுமில்லை. பொருளாதாரக் கொள்கைகளை ஓரங்கட்டிவிட்டு, மதவெறி எதிர்ப்பு அரசியலுக்கு வலுச் சேர்க்க முடியாது. இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவை. நவதாராளவாதக் கொள்கைதான் மதவெறி அரசியலுக்கு ஆதரவான கள வீரர்களை உருவாக்குகிறது. இதை குஜராத் முதல் மகாராஷ்டிரா வரை நேரடியாகக் கண்டிருக்கிறோம். தமிழ்நாட்டிலும் அத்தகைய சூழலை தவெகவின் பொருளாதாரக் கொள்கைகள் உருவாக்கி வருகிறது. சென்னை விமான நிலையத்தை தனியார் வசம் ஒப்படைக்கக் கோரி தமிழ்நாட்டு முதல்வர் விஜய் பிரதமர் மோடிக்கு எழுதிய ரகசிய கடிதம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

இந்தப் பின்னணியில், இடதுசாரி அரசியல் மாற்றணி வலுப்படுவது, இடதுசாரி அரசியலை அறுதியிடுவது தமிழ்நாட்டின் பிரச்சனைகளை, தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு மிக அவசியமான ஒன்றாகும்.

**இடதுசாரி அரசியல் என்பது தேர்தல் அணிதானா?**

இடதுசாரி அரசியல் என்பது தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதன் மூலம் மட்டுமே வலுப் பெறுவதில்லை. தேர்தல் பங்கேற்பு என்பது வீதிப் போராட்டங்களின் ஒரு நீட்சியாக மட்டும்தான் இருக்க முடியும். அந்தப் போராட்டங்களின் மூலம் பெறப்படும் பரந்த மக்கள் செல்வாக்குதான் வளர்ச்சிக்கு அடிப்படையானது. கம்யூனிஸ்ட் கட்சிகளின் சுதந்திர இருத்தலையும் சுதந்திர செயல்பாட்டையும் சுதந்திரமாக முடிவெடுக்கும் உரிமையையும் சுதந்திரமாக அறுதியிட்டு எழுவதையும் ஒருபோதும் காவுகொடுக்க முடியாது. வர்க்கப் போராட்டங்கள், அனைத்து வகை ஆதிக்கங்களுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள், மக்கள் உரிமைப் போராட்டங்கள் எந்த அளவுக்கு வலுப்பெறுகிறதோ அந்த அளவுக்குத்தான் தேர்தல் வாக்குகளும் தேர்தல் வெற்றியும் அமைய முடியும். இதில் எந்த மாயையும் இல்லை. இதற்கு எந்த மாற்றும் இல்லை.

1952ல் நடந்த ஒன்றுபட்ட சென்னை மாகாண சட்டப்பேரவைத் தேர்தலில் 131 தொகுதிகளில் போட்டியிட்டு 62 தொகுதிகளில் வென்றது கம்யூனிஸ்ட் கட்சி. அன்றைய காலகட்டத்தில், கம்யூனிஸ்டுகள் தலைமை தாங்கி நடத்திய தொழிலாளர் போராட்டங்கள், டெல்டா மாவட்டங்களில் நடந்த விவசாயத் தொழிலாளர் போராட்டங்கள், தலித் மக்களின் சம உரிமை, சமூக மரியாதைக்கான போராட்டங்கள் அதன் விளைவாக எட்டப்பட்டதுதான் அந்த மாபெரும் வெற்றி. ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான பிரதான எதிர்க் கட்சியாக தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சிதான் இருந்தது.

அதற்குப் பிறகு 1957ல் நடந்த தேர்தலில் கம்யூனிஸ்டுகள் பெரும் தேர்தல் வெற்றி பெற முடியவில்லை என்றாலும் மக்கள் போராட்டங்களைக் கட்டமைக்கும், ஆளும் வர்க்கங்களுக்கு சவால் விடுக்கும் மாபெரும் கட்சியாக கம்யூனிஸ்டு கட்சிதான் இருந்தது.

60கள் காலகட்டத்தில், தமிழ்நாட்டில் இந்தித் திணிப்புக்கு எதிரான மொழி உரிமைக்கான போராட்டங்கள், அடையாள அரசியல் போராட்டங்கள் எழுந்த பின்னணியில், திமுக முதன்மையான எதிர்க்கட்சியாக எழுந்து, 67 தேர்தலில் ஆட்சியைப் பிடித்தது. 1967 தேர்தல் முதல் 2026 தேர்தல் வரை, சிபிஐ, சிபிஐஎம் கட்சிகள் தனித்தோ, கூட்டாகவோ திமுக அல்லது அதிமுகவோடு இணைந்துதான் தேர்தல் களம் கண்டனர். இந்த இடைத் தேர்தலில் ஓர் இடதுசாரி மாற்றணியாக எழத் துணிந்திருப்பது தமிழ் நாட்டு மக்களுக்கு, தமிழ்நாட்டின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஒரு புதிய பாதையைக் காட்டுகிறது.

**இடதுசாரி மறுமலர்ச்சி**

இந்த இடைத் தேர்தல் தமிழ்நாட்டில் ஓர் இடதுசாரி அரசியல் மறுமலர்ச்சிக்கு, இடதுசாரி இயக்க எழுச்சிக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்திட வேண்டும். அத்தகைய ஒரு மாற்று அரசியல் பார்வையோடுதான், ஓர் இடதுசாரி அரசியல் அறுதியிடலை தமிழ்நாட்டில் நிகழ்த்திட வேண்டும் என்றுதான் சிபிஐஎம்எல் லிபரேசன், சிபிஐ, சிபிஐஎம் கட்சிகள் இணைந்து ஓர் இடதுசாரி ஒருங்கிணைப்பைக் கூட்டாக வடிவமைத்திருக்கிறது.

பிஜேபியின் பாசிச எதிர்ப்பு அரசியலையும், அதன் பல்வேறு மாநிலப் பரிமாணங்களையும் வீழ்த்திடும் விதத்திலும், மாநில உரிமைகள் என்ற பெயரில், மாநில வளர்ச்சி என்ற பெயரில் புறக்கணிக்கப்படும், நசுக்கப்படும் உழைக்கும் மக்கள் உரிமைக் குரலை எழுப்பிடும் விதத்திலும் இடதுசாரிகள் தமிழ்நாட்டில் தமது பயணத்தை தொடர்ந்து வருகின்றனர். அதில் ஒரு மைல் கல்லாக இந்த இடைத் தேர்தல் அமைந்திட வேண்டும்.

**இடதுசாரிகளுக்கு வாக்களிப்போம்!**

ஆகவே, *மதுராந்தகத்தில் சிபிஐஎம் வேட்பாளர் தோழர் பி. சுகந்தி அவர்களுக்கு அரிவாள் – சுத்தியல் – நட்சத்திரம் சின்னத்திலும் தாராபுரத்தில் சிபிஐ வேட்பாளர் பி.லட்சுமணன் அவர்களுக்கு கதிர் – அரிவாள் சின்னத்திலும்*

அந்தத் தொகுதி மக்கள் வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

60 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சி செய்து வந்த திமுக, அதிமுக – பிஜேபி கூட்டணிகளையும் அதே பாதையில், புதிதாக வளர்ந்து வரும் தவெகவையும் தேர்தலில் தோற்கடித்திட வேண்டும் என அந்தத் தொகுதி மக்களுக்கு சிபிஐஎம்எல் லிபரேசன் அறைகூவல் விடுக்கிறது. ❑

# செப்டம்பர் செய்தி: தமிழ்நாடு மீண்டும் இடது பக்கம்!

பாசு

அறுபது ஆண்டுகளாக அரசியல் சமூக களத்தில் ஆகப் பெரும் செல்வாக்கு செலுத்திவரும் திராவிடக் கட்சிகள் செப்டம்பர் மாதத்தை மிக முக்கிய மாதமாகக் கருதுகின்றன.

செப்டம்பர் 17, பார்ப்பனிய மனுநீதி, பெண்ணடிமைத் தனத்துக்கு எதிராகப் போர்க்குணமிக்க பகுத்தறிவு கருத்துப் போராட்டத்தை நடத்திய பெரியார் பிறந்தநாள். சமூக சீர்திருத்த இயக்கமான திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து சென்று, பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 (ஸ்டாலின் அரசு சமூகநீதி நாளாக அறிவித்தது) ல் திமுகவை தோற்றுவித்து ஆட்சி அதிகாரம் வரை கொண்டு சென்ற அண்ணாத்துரையின் பிறந்தநாள் செப்டம்பர் 15. இந்த மூன்று நிகழ்வுகளையும் ஒருசேர நினைவூட்டுகிற வகையில் “முப்பெரும் விழாவாக” நடத்துவது திமுகவின் வழக்கம். இந்த ஆண்டு, முக்கிய அரசியல் திருப்பமாக, பெரியார், அம்பேத்கர், வேலுநாச்சியார், காமராஜர், அஞ்சலை அம்மாள் இவர்களை கொள்கைத் தலைவர்களாக அறிவித்துள்ள தவெக ஆட்சியில் ‘முப்பெரும் விழா’ நினைவு கூரப்படுகிறது.




செப்டம்பரில் வேறுபல அரசியல் சமூக முக்கியத்துவம் கொண்ட நாட்களும் உள்ளன. பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக கப்பலோட்டிய தமிழன், தொழிலாளர் தலைவர், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரம். பிறந்தநாள் செப்டம்பர் 5. தமிழ் மக்களின் தேசவிடுதலை வேட்கையை வீர உணர்ச்சியாக வடிவமைத்த மகாகவி பாரதியார் மறைந்த நாள் செப்டம்பர் 11. காங்கிரஸ்காரராக வாழ்க்கையைத் தொடங்கி, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இந்திய சுதந்திரம் சமத்துவதைக் கொண்டுவரும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துப் போன நிலையில், சமூக சமத்துவப் போரை முன்னெடுத்த தியாகி இமானுவேல் சேகரன் நினைவு நாளும் செப்டம்பர் 11.

சொல்லப்பட்டுள்ள நாட்கள் முற்றிலும் தற்செயலானவை. அந்த நாட்களில் நடந்த நிகழ்வுகள் சமூக, அரசியல், பண்பாட்டு இயக்கங்களால் விளைந்தவை. இந்தத் தற்செயல் நாட்கள் கண்ணாடி வழியே தமிழ்நாட்டின் வரலாற்றை மீளாய்வு செய்கிறோம்.

மேலே செல்லும் முன் வேறு சில நாட்களையும் நினைவுபடுத்திட வேண்டும். செப்டம்பர் 2 தோழர்கள் சந்திரகுமார்-சந்திரசேகர் நினைவு நாள். அறுபத்தேழில் அரியணையேறிய திமுக ஆட்சியில் நடைபெற்ற வெண்மணி படுகொலை இந்தியாவையே உலுக்கியது. ஏறத்தாழ இருபது ஆண்டுகளில் மீண்டும் தஞ்சை மண்ணில் அடித்தட்டு மக்களைத் திரட்டி நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்துக்கு சவால் விட்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சந்திரசேகர்-சந்திரகுமார் படுகொலை செய்யப்பட்ட நாள் செப்டம்பர் 2. தென்திசை தமிழ்நாட்டின், சிவகங்கை மண். சம உரிமை உணர்வுடன் புரவி எடுப்பதும் (உஞ்சனை படுகொலை), சாமி கும்பிடுவதும் கொலைக்குற்றமாக கருதப்பட்ட நாட்டு அதிகாரக் கட்டமைப்பில் உரத்து பேசவும் தயங்கிய அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக் கிடந்த “ஊமை ஜனங்களை” செங்கொடி தூக்கி ஓங்கி முழங்கச் செய்த தோழர் சுப்பு கொல்லப்பட்ட நாள் செப்டம்பர் 13. சமத்துவம் வேண்டும். அதை பறித்தெடுக்க அதிகாரம் வேண்டும் என இமானுவேலுவின் தொடர்ச்சியாக முழங்கியவர் சுப்பு.

இன்று அதிகாரம் நிறம் மாறி இருக்கிறது. கைமாறி இருக்கிறது. பழைய காங்கிரஸ்

பிரபுக்கள் சிறுத்துப் போயிருக்கிறார்கள். புதிய பிரபுக்கள் (கனிம வளத்துறை அமைச்சர்) சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரசும் தவெகவும் கை கோர்த்துக் கொண்டிருக்கின்றன. 50 ஆண்டுகளுக்கும் மேலான சமூக சமத்துவ இயக்கமும் கம்யூனிஸ்ட் அரசியலும் தோழர் சுப்புவின் தலைமையும் அதிகாரக் கோடுகளை திருத்தி எழுதியிருக்கிறது.

தஞ்சை கிராமப்புரங்களில் நிலப்பிரபுத்துவ நுகத்தடியில் கட்டப்பட்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களை எழுந்து நிற்கச் செய்தவர். அடித்தால் திருப்பியடி, துண்டை தோளில் போடு, சிவப்புக் கொடியை தூக்கிப்பிடி என சிலிர்ப்பூட்டியவர். நிலம், கூலி, சுயமரியாதை, அதிகாரம் என்பதை சிவப்பு அரசியலாக மாற்றிக் காட்டிய சீனிவாசராவ் மறைந்தது செப்டம்பர் 30.

**ஒன்றிலிருந்து மற்றொன்று...**

சிங்காரவேலர் தொடங்கி சீனிவாசராவ் வரை, தோழர்கள் பெரியார், ஜீவா, ராமமூர்த்தி, சங்கரய்யா, நல்லக்கண்ணு உள்ளிட்டோர் தேச விடுதலை இயக்கத்தால் உத்வேகம் பெற்றவர்கள். பின்னர் சுயமரியாதை சமூக சீர்திருத்த இயக்கம் வழியாக சோசலிச, கம்யூனிச கொள்கைப் பிடிப்பால் உச்சம் பெற்று இந்தத் தமிழ்ச் சமூகத்துக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்கள். தேச விடுதலை இயக்கத்தின் போதாமை சுயமரியாதை இயக்கத்துக்கு பாதை போட்டது. சுயமரியாதையின் எல்லைக் கோடு, கம்யூனிச இயக்கத்தை வரவேற்றது. நாற்பதுகள் தொடங்கி அறுபது வரை, சமூகநீதி திராவிட இயக்கமும் இடதுசாரி இயக்கமும் முன்னும் பின்னுமாய் போட்டியில் இருந்து, இடதுசாரி இயக்கத்தை பின்னுக்கு தள்ளிய திராவிட இயக்கம் அறுபத்தேழில் அரியணை ஏறியது.

புரட்சிகர திருப்பமாக, 67ல் நக்சல்பாரி வெடித்தது. அதன் அதிர்வுகள் தமிழகத்திலும் தெறித்தது. இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் களம் கண்டு திமுகவால் ஈர்க்கப்பட்ட ஆளுமைகள் வெண்மணி கொடூரம் கண்டு கொதித்தனர். மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியின்பால் ஈர்க்கப்பட்டனர். அதிகாரத்தில் இருந்த திமுக அதிர்ச்சியடைந்தது. ஆட்சியாளர் கண்ணசைவில் மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட் கட்சியின் முதல் மாநிலச் செயலாளர் (அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்) தோழர் அப்பு காணாமலடிக்கப்பட்டது இந்த செப்டம்பரின் ஏதோ ஒருநாளில்தான். 'புரட்சித் தலைவர்' ஆட்சியில் இடதுசாரி புரட்சியாளர்களின் மக்கள் போராட்டம் தர்மபுரி, வடார்க்காடு மாவட்டங்களில் வீறு கொண்டு எழுந்தபோது, போராட்டங்களை ஒடுக்கும் எண்ணத்துடன் எம்ஜிஆர்-தேவாரம் கூட்டணி, புரட்சியாளர் பாலனைக் கொன்றதும் இதே செப்டம்பரில் தான்.

தமிழ்நாட்டின் பரந்த சமூகங்களை உள்ளடக்கிய முற்போக்கு சமூக சீர்திருத்த இயக்கம், அரசியல் வடிவம் பெற்று சாமான்ய மக்களின் அடையாளமாக ஆட்சி பீடம் ஏறி ஆதிக்க மேட்டுக்குடிகளின் ஆளும் கட்சியாக மாறிய கதைதான் கடந்த 60 ஆண்டுகளின் ஆட்சி வரலாறு. திராவிட இயக்கத்தின் பரந்த சமூக அடித்தளமாக இருந்த ஏழை எளிய சாமான்ய மக்கள் மீது நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைத் திரிசூலங்களை ஏவின திராவிட ஆட்சிகள். சமூகநீதி நலத்திட்ட திராவிட மாடல் கொள்கைகள், அதிதீவிர சமூக, பொருளாதார அரசியல் ஏற்றத் தாழ்வையே உருவாக்கின. "இரு துருவ அரசியல்" என நாகரிகமாக அழைக்கப்பட்டாலும் கட்சி அரசியல் எனும் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாத அரசியலாக மூழ்கிப்போனது. முற்போக்கான பண்பாட்டு உருவாக்கத்திற்காக பெரிதும் பாராட்டப்பட்ட தமிழ்நாடு அருவருப்பு பண்பாடாக இழிந்தும் போனது.

2026ன் "மாற்றம்", நீண்டகால "ஏமாற்றம்" உருவாக்கியது. ஆனால் நூறு நாட்களை தாண்டியுள்ள தவெக ஆட்சி, திமுக, அதிமுக ஆட்சிகள் வெகு தீவிரமாக பின்பற்றிய கார்ப்பரேட் பாதையை இன்னும் முனைப்பாக செலுத்துகிறது. 2026 சட்டப்பேரவைத் தேர்தல் வரை, தில்லி எதிர் தமிழ்நாடு, பாஜக எதிர் திமுக அணி என்று இருந்த நிலைமை பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. கொள்கை எதிரி கண்ணுக்குத் தெரியவில்லை. தூயசக்தி தவெக எதிர் தீயசக்தி திமுக என்பது முன்னுக்கு நிறுத்தப்படுகிறது. இரு துருவ அரசியலே தொடர்கிறது. அதிமுக இடத்தில் தவெக என்ற சமன்பாடு மாறுதல் மட்டுமே. "மாற்றம்" எதுவும் 'தோற்றம்' தரவில்லை. பெரியாரை கொள்கைத் தலைவராக காட்டும் தவெக, தனது கொள்கையாக 'தாய்மாமன் மோதிரம்', 'அண்ணன் சீர்' திட்டங்களைக் காட்டுகிறது. மற்றொரு கொள்கைத் தலைவர் காமராசர் மிசா கொடுமைகளுக்காக கண்ணீர் வடித்தார். ஆனால் தவெக தலைவர் விஜய் மிசா கொடுமைகளை கிண்டலடித்து கொச்சைப் படுத்துகிறார்!

இங்குதான் தனித்துவமான இடதுசாரி அரசியல் தேவைப்படுகிறது. நாட்டு விடுதலைப் போராட்டம் வழியே கம்யூனிஸ்ட் லட்சியத்தை வந்தடைந்த இடதுசாரிகள் கார்ப்பரேட்-காவிப்பாசிச கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துப்போராடி இரண்டாம் சுதந்திரப் போராட்டத்துக்கு தலைமை தாங்கும் வேளை வந்துள்ளது. வரலாற்றில் முன்னரங்கில் களமாடிய இடது அரசியல் மீண்டும் முன்னரங்கிற்கு வந்தாக வேண்டும். தமிழ்நாட்டின் கடந்தகால முற்போக்கு சமூக விழுமியங்களுக்கு பாசிசமே கடும் அச்சுறுத்தல்.அந்த அச்சுறுத்தலை முறியடிக்க இடதுசாரிகளேகளமாடமுடியுமென்பதே செப்டம்பர் சொல்லும் செய்தி. தமிழ்நாடு இடது பக்கம் திரும்ப வேண்டும்.❑

# தவெக அரசு எதை நோக்கிப் பயணிக்கிறது?

சந்திரமோகன்

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடரின் கடைசிநாளில், செப். 8 ல், தவெக அரசு ஓசையின்றி சில மசோதாக்களை நிறைவேற்றி இருக்கிறது.

ஆனால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடர் பற்றி தவெக அரசு வெளியிட்ட செய்தி வெளியீட்டில் (த.நா.ச.பே. எண்: 24, 09.09.2026) 'ஜனநாயக மாண்பையும் மக்கள் நலனையும் முன்னிறுத்திய' பதினேழாவது பேரவையின் கூட்டத்தொடர் சிறப்புகள் பற்றி பின்வருமாறு பறைசாற்றிக் கொண்டது.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 28 நாள்கள், அதாவது 178 மணி நேரம் 31 நிமிடங்கள் நடைபெற்றது. விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17 அறிக்கைகளையும், 51 துறைகளின் சார்பில் 1,117 அறிவிப்புகளும் வெளியிடப்பட்டதோடு, 13 சட்ட முன்வடிவுகள் மற்றும் 9 அரசினர் தனித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன".... "பல்வேறு துறைகள் தொடர்பான முக்கிய அரசினர் சட்ட முன்வடிவுகள் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, அவற்றின் மீது உறுப்பினர்களின் கருத்துகள் பெறப்பட்டன."...

"என்னென்ன அறிவிப்புகள்," "என்னென்ன வரலாற்றுச் சிறப்புமிக்க தனித் தீர்மானங்கள்" என விளக்கியிருந்த அரசு, புதிய சட்ட மசோதாக்கள் பற்றி, "13 அரசினர் சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றம்" என தலைப்பிட்டு பின்வருமாறு சுருக்கமாக, கமுக்கமாகத் தெரிவித்துவிட்டது.

"விரிவான விவாதங்களுக்குப் பின்னர், நிர்வாகத்தை மேலும் மேம்படுத்துதல், மக்கள் நலனை உறுதிப்படுத்துதல் மற்றும் மாநிலத்தின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட 13 அரசினர் சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டன."

ஒரு சில சட்ட முன்வடிவுகள் பற்றி இங்கு பரிசீலிப்போம்.

**நகர்- ஊரமைப்பு திருத்த மசோதா :**

**விவசாய நிலங்களை அழிக்கும்!**

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் பி.ராஜ்குமார் கடந்த செப்டம்பர் 1ஆம் தேதி இந்தச் சட்ட முன்வடிவை தாக்கல் செய்தார். அதில், நன்செய் நிலங்களை மேம்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட ஆட்சியரின் முன் அனுமதியை பெறும் நடைமுறையை நீக்கவும், நன்செய் நிலங்களைப் பொருத்தவரை உள்ளாட்சி அமைப்புக்கு முன் ஒப்புதல் வழங்கும் அதிகாரத்தை நகரமைப்பு இயக்குநருக்கு வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

"விவசாய நிலங்களை வேறு பயன்பாட்டுக்கு மாற்றிக்கொள்ள, மாவட்ட ஆட்சியரின் முன்அனுமதி தேவையில்லை" என்கிறது, இந்தச் சட்டம். தற்போது விவசாய நிலத்தைக் கட்டடம் கட்டப் பயன்படுத்துவது என்றால், மாவட்ட ஆட்சியர் தலைமையில் வேளாண், வருவாய், நீர்ப்பாசனத் துறையினர் ஆய்வு செய்வார்கள். அதற்குப்பிறகு, அது தீவிர விவசாய நிலம் அல்ல என அவர்கள் சான்றளிக்க வேண்டும்.

இப்போது, இந்தச் சட்டம் மூலமாக இத்தகைய முன் அனுமதி எல்லாம் தேவை யில்லை. இதனால் விவசாய நிலங்கள் மனைகளாகி ரியல் எஸ்டேட் பெருகும்; விவசாய நிலங்களில் தொழிற்சாலைகள் அமைப்பதும் எளிதாகும்; விளைநிலங்கள் குறையும் - உணவு உற்பத்தி கேள்விக்குறியாகும்.

மாவட்ட ஆட்சியருக்குத்தான் அனைத்து நிலங்களின் விவரம் தெரியும்; நகரமைப்பு இயக்குநருக்கு தெரியாது. இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் நன்செய் விவசாய நிலங்களை எளிதில் கையகப்படுத்த முடியும். பஞ்சாயத்து ராஜ் சட்டத்துக்கு எதிராக இந்தச் சட்ட முன்வடிவு உள்ளது. இதனால் விவசாய நிலப்பரப்பு குறைந்து உணவு உற்பத்திக்கு பாதிப்பு ஏற்படும்.

அமைச்சர் பி.ராஜ்குமார், ஒற்றைச்சாளர முறையின்கீழ் தடையில்லாத் திட்டச் சான்றிதழ்களைப் பெற உதவும் என்பதால் தாமதம் குறையும் என்கிறார்; காலதாமதத்தைத் தவிர்க்க அரசு இந்த முடிவை எடுப்பதாகக் கூறுவதும் தவறாகும்.

அதிமுக, பாமக, சிபிஎம், சிபிஐ ஆகிய கட்சிகள் எதிர்த்திருக்கின்றன. இக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும், 'ஆய்வுக் குழுவுக்கு அனுப்ப வேண்டும்' எனக் கோரினர். எனினும், இந்தச் சட்டத் திருத்த முன்வடிவு குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் அவை யிலிருந்து வெளியேற்றப்பட்டதால், இவற்றை எதிர்க்கவில்லை போலும்!

"விவசாய நிலம் பாதிக்கப்படக் கூடாது

என்பதற்காகவே பரந்தூர் விமான நிலையத் திட்டத்துக்குத் தடை” என்ற தவெக அரசின் அறிவிப்பு உண்மையான அக்கறை தானா என்ற கேள்வி எழுகிறது.

விவசாய நிலங்களை அழிக்கும் நகர்-ஊரமைப்பு திருத்த மசோதா கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும்.

**தனியார் பல்கலைக்கழகங்களை தொடங்க நிபந்தனைகளைத் தளர்த்தும் சட்டத்திருத்த மசோதா: உயர்கல்வியில் தனியார்மய ஆதிக்கத்தை வலுப்படுத்தும்!**

தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அவற்றைத் தொடங்குவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்தும் சட்ட திருத்த மசோதாவை எதிர்ப்புகளுக்கு நடுவே, தவெக அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது!

இந்த மசோதா, தனியார் பல்கலைக்கழகம் தொடங்குவதற்கான நிலத் தேவையை, காப்பீட்டுத் தொகையைக் குறைக்கிறது. இந்த மசோதா திமுக ஆட்சிக்காலத்திலும் கொண்டுவரப்பட்ட போது, “இதனால் கல்வி வணிகம் மேலும் பெருகும்; இடஒதுக்கீட்டுக்கு ஆபத்து ஏற்படும்” என கட்சிகள், அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்ததால், அப்போது அந்த மசோதாவைத் திரும்பப் பெற்றது, திமுக அரசு.

இந்த மசோதா, ஒன்றிய பாஜக அரசின் புதிய கல்விக் கொள்கையின் NEP ஒரு கூறு ஆகும். புதிய கல்விக் கொள்கையைக் கடுமையாக எதிர்க்கும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் விஸ்வநாதன்தான் இம்மசோதாவை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

பாஜக அரசின் புதிய கல்விக் கொள்கையை எதிர்த்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் இந்தச் சட்ட திருத்த மசோதாவை ஆதரித்திருக்கிறது என்பது அரசியல் முரண் ஆகும்.

இதன் விளைவாகத் தனியார் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரிக்கும்; அரசு பல்கலைக்கழகங்களின் இருப்பு கேள்விக்கு உள்ளாகும்.

குறைந்தபட்சம் கலை மற்றும் அறிவியல் படிப்புகளுக்குக் கூட வங்கிக் கடன் பெற்றுப் படிக்கும் அவலநிலைக்கே இது வழிவகுக்கும். உயர்கல்வியில் நமது மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தை (Gross Enrolment Ratio) எதிர்மறையாகப் பாதிக்கும். ஏழை எளிய, விளிம்புநிலை மாணவர்களின் உயர்கல்விக்கான வாய்ப்புகளைப் பாதித்து வெளியேற்றப்படுவார்கள். இத்தகைய கல்விச் சூழலை தமிழ்நாட்டில் உருவாக்க முயற்சிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

**தவெக அரசின் மக்கள் விரோத சட்டங்களை முறியடிக்க விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும்.** ❑




## நீதி கேட்டு ஆர்ப்பாட்டம்




காஞ்சிபுரம் மாவட்டம், சிங்கடிவாக்கத்தில் கொத்தடிமையாக வேலைக்கு அமர்த்தியிருந்த பழங்குடி பெண் தேன்மொழிக்கும் அவரின் பச்சிளம் குழந்தைக்கும் உரிய நேரத்தில் மருத்துவ உதவி கிடைக்காமல் உயிரிழந்தனர். அவர்களின் இறப்புக்கு காரணமான விறகு வியாபாரி ஆறுமுகம் என்பவர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யக் கோரியும் உயிரிழந்த தேன்மொழியின் குடும்பத்திற்கு உரிய இழப்பீடு வழங்க் கோரியும் உயிரிழந்த தேன்மொழியின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கக் கோரியும் அனைத்து பழங்குடி போராட்ட முன்னணி சார்பிலும், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் சார்பிலும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று 21.09.2026 வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக தோழர் சரோஜா தலைமையில் நடைபெற்றது.

# இன்றும் வேண்டும் தோழர் சுப்பு!

**சிம்சன்**



இதிகாச புனைவுகளும் இரத்தம் சிந்திய வரலாறும் கொண்டது ராமேசுவரம் முதல் கந்தர்வக்கோட்டை வரையிலான பழைய முகவை மாவட்டம். பிரிட்டிஷ் எதிர்ப்புப் போராட்டங்களாலும், ஆகஸ்ட் விடுதலைப்புரட்சி தியாகிகளாலும் புகழ்பெற்றது சிவகங்கை மண்.

விடுதலைக்குப் பிறகு வறுமை ஒழியும், வளமை கொஞ்சும், சமத்துவம் மலரும், ஜனநாயகம் தழைக்கும் என்று காத்திருந்த விவசாயிகள், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பட்டியலின மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. கொழுத்த கதர் சட்டைகளே கோலோச்சின. மிட்டா மிராசுகளின் ஆட்சியே நிலத்தின்மீது, பொதுச் சொத்துக்களின் மீது ஆதிக்கம் செலுத்தின. ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் மிட்டா மிராசுகளின் விரல் சொடுக்கின்படி சேவகம் செய்தனர். அன்றைய நிலைமை, அடித்தட்டு மக்களின் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் பெரும் தடைக் கற்களாக இருந்தன.

வரலாறு நின்று போய்விடவில்லை. அது நிலத்துக்கான போராட்டமாக பயணத்தைத் தொடங்கியது. சமூக சமத்துவத்துக்கான கூர்மையான போராட்டங்களாகத் தொடர்ந்தது. இனாம் நிலம் ஒழிக்கப்பட்டாலும் உழுதவர்களுக்கு நிலம் வந்து சேரவில்லை. உழவர்களின் போராட்டங்கள் வெடித்துக்கிளம்பின. காந்திக்கே சவால் விட்ட சாதி ஒடுக்குமுறையாளர்களை எதிர்த்து சமத்துவத்துக்கான போராட்டம் பீறிட்டுப் பரவியது. இமானுவேல் சேகரன் தியாகியானார் (1956). சுயமரியாதை கருஞ்சட்டைக்காரர்களும் செஞ்சட்டை தோழர்களும் சிவகங்கை மண்ணில் வேர்விட்டனர்.

இந்த வரலாற்றுத் தடங்களின் தொடர்ச்சியாக, நக்சல்பாரி விவசாய எழுச்சியில் பிறப்பெடுத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) சிவகங்கை மண்ணில் களமாடத் துணிந்தது. பட்டியலின மக்களின் சமத்துவத்திற்காக, சாதி ஒழிப்பை இலட்சியமாகக் கொண்ட போராளிகளும் தலைவர்களும் பண்ணையார்களால் படுகொலை செய்யப்பட்ட காலமது. புரவி எடுக்கும் உரிமை எங்களுக்கும் உண்டு என கர்ஜித்த உஞ்சனை அய்வர் படுகொலை செய்யப்பட்டனர். நிலம், கூலிக்காகப் போராடிய விவசாயிகளின் போராட்டமும், சுயமரியாதை, சமத்துவத்துக்காகப் போராடிய வர்க்கப் போராட்ட வடிவங்களை முன்னெடுக்க சிவகங்கை மாவட்டத்தில் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியின் உழைக்கும் விவசாயிகள் சங்கம் கட்டப்பட்டது. மாவட்டத் தலைவராக தோழர் சுப்பு வெகுசிறப்பாக செயல்பட்டார். நிலம், கூலி, சுயமரியாதை முழக்கங்களை கிராமங்கள் தோறும் சின்னச்சின்ன குடியிருப்புகள் தோறும் கொண்டு சென்றார். களவங்குடி சாதி ஆதிக்கவாதிகள், கல்லூரணி கிறித்தவ ஆதி திராவிடர்களுக்கு விவசாயத்திற்கான நீராதாரங்களை தர மறுத்து நெருக்கடி தந்த பொழுது, தோழர் சுப்பு ஏழைவிவசாயிகளுக்கு ஆதரவாக நின்றார் தோழர் சுப்பு.

சிறுவாட்சி, கங்கணி, துத்தகுடி தலித்துகளின் நிலத்தை அபகரித்த ஆதிக்கவாதிகளிடமிருந்து நிலத்தை மீட்டுக்கொடுத்தது மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி. வடுகணி மக்களின் கண்மாயை மீட்டது, தத்தணி மக்களின் நிலங்களுக்கு பட்டா பெற்றுக் கொடுத்தது. மொன்னாணி நிலமற்ற விவசாயிகளுக்கு 46 ஏக்கர் அரசு நிலங்களை எடுத்துக் கொடுத்தது ஆகியன குறிப்பிடத்தக்க நிலப் போராட்டங்களாகும். அதன் தொடர்ச்சியாக மொன்னாணி, உலக்குடி கிராமத்தாருக்கு 106 ஏக்கர் நிலங்களை மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி வழிகாட்டியபடி அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கம் தோழர்கள் சிம்சன், நாராயணன் தலைமையில் கையகப்படுத்தி நிலமற்றோருக்கு வழங்கினர்.

நாட்டுத் தலைமையின் நிலங்களுக்கு மட்டும் பயன்படும் விதத்தில் முத்துக்கண்மாய் அருகே அணை கட்டுவதற்கு எடுத்த முயற்சியை உழைக்கும் விவசாயிகள் சங்கத் தலைமையில் சாதிப்பிரிவினைகளை தாண்டி அனைத்து விவசாயிகளையும் அணி திரட்டி வென்றார் ஏழை விவசாயிகளின் தலைவர் சுப்பு. நாட்டுத் தலைமை நாக்கை கடித்துக் கொண்டது.

கிராமப்புற வறியவர்களை அணிதிரட்டவும் நிலமற்ற கூலி ஏழை விவசாயிகளின் கோரிக்கைகளை முன்னெடுக்கவும் அன்று தோழர் சுப்பு செய்த துணிச்சலான போராட்டங்கள் அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கமாகவும் அகில இந்திய விவசாயிகள் மகாசபையாகவும் இன்று எழுந்து நிற்கிறது. அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமான நாடு கட்டமைப்பின் பிளவு நடவடிக்கைகளையும் மீறி பட்டியல் சமூக, பிற்படுத்தப்பட்ட சமூக விவசாயிகளையும் சங்கத்தில் ஒன்றுபடுத்தினார் தோழர் சுப்பு! கிராமப்புற தொழிலாளர், ஏழை நடுத்தர விவசாயிகளின் தலைவர் தோழர் சுப்பு!

அன்று, சாதி ஆதிக்கம், பட்டியலின சமூக மக்களுக்கு

சமத்துவத்தை மறுத்தது. சமமாய் அமர்ந்து டீ குடிக்க அனுமதிக்கப்படவில்லை. அதற்கு எதிர் வினையாகத்தான் மாடக்கோட்டைக்கு செல்லும் முகப்பு பாதையில் “சிங்கமுகம் டீ கடை” யை திறந்தார் சுயமரியாதைப் போராளி சுப்பு! தாயாரின் சிறுவாட்டுப் பணம் நண்பர்களின் நன்கொடையில் தொடங்கப்பட்ட டீக்கடை அரசியல் கூடமாக உயர்வு பெற்றது.

அந்த நாட்களில் தேவகோட்டையிலிருந்து சிறுவாட்சி வரை சாலை இல்லை. அதனால் பேருந்தும் இல்லை. 1982 ல் தேரளப்பூர் பாலம் அருகே விவசாயிகள் சங்கத்தின் டோல்கேட் அமைத்து அரசு அதிகாரிகள் வந்த சிற்றுந்து சக்கரங்களின் காற்றைப் பிடுங்கி விட்டு விவசாயிகளை கலகம் செய்ய வைத்தார் கலகக்காரர் சுப்பு!

ஊராட்சிமன்ற அதிகாரம் ஒரு தரப்புக்கு மட்டுமே இருக்க வேண்டுமா? அரசமைப்புச் சட்டப்படி அனைத்து தரப்பும் பங்குபெற வேண்டாமா? என்ற கேள்வி கேட்ட சுப்பு, ஆதிக்க சக்திகளுக்கு சவால் விட்டு பொதுத் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். பதவிக் காலம் முடியும் வரை நேர்மையுடன் செயல்பட்டார். அனைத்து தரப்பினரும் பாராட்டும் வகையில் முதுகெலும்புடன் எழுந்து நின்று செயல்பட்டார் மக்கள் தலைவர் சுப்பு!

சிறுவாட்சி சாலை வசதிக்காக அதனை இணைக்கும் நகராட்சி சாலையைப் போடுவதற்காக நகராட்சி அதிகாரிகளின் மெத்தனத்தை அம்பலப்படுத்தும் விதமாக எருமை மாடுகளை நகராட்சி அலுவலகத்திற்குள் குடியேற வைத்தார். ஊழல் அதிகாரிகளுக்கு சிம்ம சொப்பனமாக நின்றார் தோழர் சுப்பு.

இன்று சங்கர், கண்ணகி, முருகேசன், கோகுல்ராஜ் காதலுக்காக கொல்லப்படுகின்றனர். ஆணவக் கொலை தடுப்புச் சட்டம் கேட்டு போராட்டம் நடந்து வருகிறது. அந்த நாட்களிலேயே, சாதி மறுப்பு காதல் திருமணங்கள் நடக்கும் இடமாக இருந்தது இகக(மாலெ) அலுவலகம். காதலர்களை சேர்த்து வைத்தார் காதலர்களின் காதலன் தோழர் சுப்பு! பெண்களை போராட்டக் களத்திற்கு தலைமை தாங்கும் பொறுப்புக்கு வர விடாப்பிடியாக பாடுபட்டார். பெண்கள் மனம் திறந்து பேசும் நம்பிக்கையான நண்பன் தோழர் சுப்பு!

இவற்றின் உச்ச கட்ட போராட்டம்தான் 1992ல் நடந்த சிறுவாட்சி கோவில் நுழைவுப் போராட்டம். 1984ஆம் ஆண்டிலிருந்து சிறுவாட்சி முத்துநாச்சி அம்மன் கோவில் திருவிழாவில் பட்டியலின மக்களுக்கு சம உரிமையும், மரியாதையும் வேண்டும் என கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அக்கோரிக்கையை நாடு ஏற்றுக் கொள்ளுமா? ஒதுங்கிப் போவாரா சுப்பு?

சிறுவாட்சி முத்துநாச்சி அம்மன் கோவில் திருவிழாவில் பட்டியலின மக்கள் அடிமை வேலைகள் செய்யமாட்டோம், பட்டியலின மக்கள் கோவிலுக்குள் சாமி கும்பிடவும் திருவிழா நடத்தவும் உரிமை வேண்டும் என்ற கோரிக்கைகளை நாடு கூட்டத்தில் மக்கள் சார்பாக முன்வைத்தார் தோழர் சுப்பு. அவரது தலைமையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டனர். 100 ஆண்டுகளாக நுழைய முடியாத சிறுவாச்சி ஸ்ரீமுத்துநாச்சி அம்மன் கோவிலில் பட்டியலின மக்கள் திரண்டு வழிபட்டனர். பகுத்தறிவு வாத்தியார் சுப்பு தள்ளி நின்று கைதட்டி ஆரவாரம் செய்தார். 1992 கோவில் நுழைவுப் போராட்ட வெற்றி கொண்டாட்டம் சிவகங்கை சீமையையும் தாண்டி அதிர்ந்தது. இரண்டாம் வைக்கம் போராட்டம் என்று கூறி பலரும் கொண்டாடினர். சாதிப் போராட்டம் என்று எதிர்ப்பார்ப்பு பாடிய கம்யூனிஸ்டுகளும் உண்டு!

ஒரு சமயம், தோழர் சுப்புவிடம் சாதிக் கொடுமை எவ்வளவு ஆபத்தானது எனச் சொன்னபோது, சாதியே கொடுமைதான் எனச் சொன்னார் தோழர் சுப்பு. இதன் பொருள், சாதி அழித்தொழிக்கப்பட வேண்டுமென்று டாக்டர் அம்பேத்கர் சொன்னதன் வலிமிகுந்த பதிவு. சாதி ஒழிப்பு போராளி தோழர் சுப்பு.

தோழர் சுப்புவின் மக்கள் செல்வாக்கு எதிராளிகளை அச்சுறுத்தியது. ஆதிக்க கோட்டையைத் தகர்த்து அதிகார சிம்மாசனத்தைச் சாய்க்கும் என பயந்தனர். தேவகோட்டை உரக்கடையில் ஆதிக்க சாதியைச் சேர்ந்த ஒருவர் கொலை செய்யப்பட்டதை அதோடு துரும்பளவு தொடர்புமில்லாத மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் தலைவர்கள்மீது சுமத்து கின்றனர். நாட்டுத் தலைவர்கள் ஆணைப்படி தோழர் சுப்பு உள்ளிட்ட 15 பேர் மீது வழக்கு சுமத்தி காவல்துறை சிறையிலடைத்தது.

காவல்துறையும், நாடு அமைப்பும் புனைந்த பொய் வழக்கில் நிபந்தனை ஜாமினில் வெளிவந்த தோழர் சுப்புவும், நாராயணனும் திருநெல்வேலி பாலம் காவல்நிலையத்தில் கையெழுத்திட்டு வரும் பொழுதுதான் கூலிப்படையினரால் 13.9.1994 தோழர் சுப்பு படுகொலை செய்யப்பட்டார். தடுக்கமுயன்ற தோழர் நாராயணன் வெட்டுக் காயம் பட்டார்.

இவ்வழக்கில் 1998 ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. தோழர் நாராயணனுக்கு ஆயுள்தண்டனை, தோழர்கள் சிம்சன், குப்பமுத்துவிற்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை. உச்சநீதிமன்ற மேல்முறையீட்டில் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டதால் மூவரும் 2004ஆம் ஆண்டு முதல் மதுரை மத்திய சிறையில் சிறை தண்டனை அனுபவித்தனர். சிம்சனும் குப்பமுத்துவும் 4 ஆண்டுகள் தண்டனையை முடித்து 2006ல் விடுதலையாகினர். அண்ணா பிறந்தநாளில் தமிழக அரசின் பொதுமன்னிப்பு சலுகையால் 2008ல் தோழர் நாராயணன் விடுதலை செய்யப்பட்டார்.

“கொலை தப்பில்லை” என்ற மனோபாவம் கொண்ட மண்ணில் தலைவர் சுப்புவின் கொலை, சாதி கடந்து அனைத்து சாதியிலுமிருந்து மன வருத்தத்தையும் கண்டனத்தையும் எழுப்பியது. ஜனநாயகமற்ற மண்ணை ஜனநாயகப்படுத்தும் போராட்டத்தின் வெற்றி. ஜனநாயகப் போராளி, கம்யூனிஸ்ட் போராளி தோழர் சுப்பு. புரட்சிகர சி.பி.ஐ.எம்.எல் கட்சியின் வழிகாட்டுதலில் நடந்தவை சுப்புவின் போராட்ட வரலாறு. தோழர் சுப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராளி. சாதியையும் வர்க்கத்தையும் உடைத்து நொறுக்கி சமத்துவம், ஜனநாயகம் படைக்க போராடிய சோசலிஸ்ட் போராளி.

தோழர் சுப்புவை நினைவு கொள்ளும்போது, சமத்துவ போராளி இமானுவேல் சேகரன், சந்திரபோஸ், சுப்புவுடன் சேர்ந்து களமாடிய நமசு, கோட்டைச்சாமி, குப்பமுத்து, அலெக்சாண்டர், சேவியர், சிலுவை முத்து, இம்மண்ணில் கால்பதித்து வழிகாட்டிய தோழர்

வினோத்மிஸ்ரா, பிவி சீனிவாசன், டிகேஎஸ் ஜனார்த்தனன், சுகுந்தன் (கீர்த்தி வல்லபன்) ஆகியோரையும் நினைவு கூர்கிறோம். நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போரில் செப்டம்பர் 2 ல் படுகொலை செய்யப்பட்ட தோழர்கள் சந்திரசேகர், சந்திரகுமார், ஆட்சியாளர்கள் உத்தரவுப்படி காணாமலாக்கப்பட்ட முதல் மாநிலச் செயலாளர் தோழர் அப்பு, பாலன் உள்ளிட்டோரையும் நினைவு கூர்கிறோம். அஞ்சலி செலுத்துகிறோம்.

மக்கள் வாழ்வுக்கும், மாணவர்களது கல்விக்கும், இளைஞர்களது எதிர்காலத்துக்கும், அரசமைப்புச் சட்டத்துக்கும், ஜனநாயகத்துக்கும், கூட்டாட்சிக்கும் ஆபத்தான ஆக்டோபஸ் கார்ப்பரேட்– பாசிசத்தை வீழ்த்திட முன்னேறிச் செல்ல நமக்கு உணர்வூட்டுகிறது; உரமேற்றுகிறது.

பழைய கதர் வேட்டிகளும், கருப்பு சிவப்பு கரைவேட்டிகளும் தவெக முகவரியில் தஞ்சமடைந்து வருகின்றன. அரசியல் நிறம் மாறுகிறது. மனிதர்களின் முகம் மாறுகிறது. அதிகாரம் கைமாறுகிறது. இடதுசாரிகள் தான் ஒரே மாற்று என்பதை மாறியுள்ள அரசியல் அறுதியிட்டுச் சொல்கிறது. இடதுசாரிகள் அரசியலின் மய்யத்துக்கு வரவேண்டும். மாற்றத்துக்கு வழிகாட்டுகிறவர்களாக வரவேண்டுமென தோழர் சுப்பு அடிக்கடி கூறுவார். அது அவரது ஆழ்ந்த விருப்பம்!

**பாசிசம் வீழ்க; ஜனநாயகம் வெல்க!**
**தமிழக அரசியலை இடதுசாரிகள் வெல்க!**
**தியாகி சுப்புவிற்கு செவ்வணக்கம்!**

# தோழர் சுப்பு நினைவேந்தல்




செப்டம்பர் 13, 2026 அன்று மாடக்கோட்டையில் தோழர் சுப்பு நினைவு இடத்தில், கொடியேற்றத்துடன் நினைவேந்தல் நிகழ்ச்சி தோழர் நாராயணன் தலைமையில் நடைபெற்றது. செப்டம்பர் 14 அன்று "பாசிச பாஜக மோடி அரசை வெளியேற்றுவோம் இடதுசாரி அரசியலை வலுப்படுத்துவோம்!" என்ற பொருளில் கருத்தரங்கு தேவகோட்டையில் நடைபெற்றது. இகக(மாலெ) சிவகங்கை மாவட்டச் செயலாளர் அ.சிம்சன் தலைமை தாங்கினார். மத்திய கமிட்டி உறுப்பினர் பாலசுந்தரம் சிறப்புரை ஆற்றினார். மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள் நாராயணன், திருநாவுக்கரசு மாவட்டக்குழு உறுப்பினர்கள் மதிவாணன், செந்தமிழ், ஜெய்சங்கர், முத்துராஜா, செல்வராஜ், தனுசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மதுரை மாவட்டச் செயலாளர், மெய்யர், இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் முருகபூபதி, சந்தன மேரி உள்ளிட்டோர் உரையாற்றினர்.

♦ பாசிச பாஜக–விற்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்தவும் தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட்டுகளின் இடதுசாரி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தவும், வலுவான தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்வது எனவும்;

♦வரும் ஆண்டில் தோழர் சுப்பு வின் போராட்ட வரலாற்றை நூலாக கொண்டு வரவும் அவரது உருவச் சிலை ஏற்படுத்த குழு ஒன்று ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

♦ தனியார் பல்கலைக்கழகத் திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும்; தேவகோட்டையில் அரசு கலைக்கல்லூரி ஏற்படுத்திட வேண்டும்;

♦ கூட்டுறவு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள அனைத்து வகையான விவசாயப் பயிர்க்கடன்களையும் (வட்டி மற்றும் அபராத வட்டி உட்பட), எவ்வித நிபந்தனைகளுமின்றி முழுமையாகத் தள்ளுபடி செய்வதோடு, அடுத்த சாகுபடிக்கான புதிய விவசாயக் கடன்களை எவ்விதத் தடையுமின்றி உடனடியாக வழங்க வேண்டும்;

♦கண்டதேவியில் தேர்வடம்பிடிக்க விரும்பும் அனைத்து தரப்புமக்களது உரிமையையும் விருப்பத்தையும் நிறைவேற்றி நீதிமன்ற தீர்ப்பை காவல்துறையும் மாவட்ட நிர்வாகமும் முழுமையாக உறுதிசெய்திட வேண்டும்;

♦ காளையார்கோவில் தூய்மைப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்ட பட்டாக்களுக்குரிய வீட்டு மனைகளை அளந்து அளிக்க வேண்டும். சட்டப்படியான கூலி, பணி நிலைமைகளை அமலாக்கம் உள்ளிட்ட கோரிக்கைகளை அரசு உடனே நிறைவேற்றிட வேண்டும்;

♦விவசாயிகளுக்கே திருப்பி அளிக்க வேண்டும், சிவகங்கை அருகே விவசாயத்துக்கு எதிரான சிப்காட் திட்டத்தைக் கைவிட வேண்டும்;

♦ முந்தைய வேலை உறுதிச் சட்டத்திற்கு முற்றிலும் எதிரான விபி கிராம் ஜி திட்டத்தை கைவிட்டு கேட்கும் அனைவருக்கும் தடையின்றி வேலைதர வேண்டும். கட்டடம், கைரேகை படம் எடுப்பதை கைவிட வேண்டும்;

♦ காவிரி–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும்;

உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




# புலம் பெயர் தொழிலாளர் உரிமைச் சங்கம் உதயம்

செப்டம்பர் 13, 2026 அன்று டெல்லி, ஹர்கிசன் சிங் சுர்ஜித் பவனில் நடைபெற்ற தேசிய அளவிலான மாநாட்டில் புலம் பெயர் தொழிலாளர் உரிமைச் சங்கம் (Migrant workers' rights forum) உதயமானது. புலம் பெயர் தொழிலாளர்களின் உரிமைகள், வேலை, பணியிடப் பாதுகாப்பு, கண்ணியம் ஆகியவற்றை பாதுகாப்பது இந்த சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும். வரலாற்று ரீதியாக புலம் பெயர் தொழிலாளர்கள், தொழிலாளர் வர்க்கத்தின் குறிப்பிடத்தக்க பகுதியாக இருந்து வந்த போதிலும், அவர்கள் அதிகம் சுரண்டப்படுகிறார்கள். 2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் 50 கோடி தொழிலாளர்களில் சுமார் 15 கோடி பேர் புலம்பெயர் தொழிலாளர்கள். இது மொத்த தொழிலாளர் படையில் ஏறத்தாழ 30% ஆகும்.

கோவிட் காலத்திய முன்னறிவிப்பற்ற பொது முடக்கம் பெரும் பகுதி புலம்பெயர் தொழிலாளரை வெளியேற்றியது. அவர்களின் வாழ்க்கை மோசமானது. கடந்த 12 ஆண்டுகளில் மோடி ஆட்சி கொண்டு வந்த தொழிலாளர் சட்டத் தொகுப்புகள், வாக்காளர் தீவிரத் திருத்தம், பல்வேறு தொழிலாளர் விரோத பாசிசச் சட்டங்கள் புலம்பெயர் தொழிலாளர் உட்பட தொழிலாளர் வர்க்கத்தின் மீது மிகப்பெரிய தாக்குதலைத் தொடுத்துள்ளது. இருந்தபோதும் இவர்களைத்தான் பாஜக தனது ஆதரவுத் தளமாக பயன்படுத்திக்கொள்ள முடிந்திருக்கிறது.

**புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள்.**

ரூ. 10,000 – 12,000 ஊதியத்திற்காக 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டியதை எதிர்த்து டெல்லி தலைநகர் மண்டலத்தில் போராடிய தொழிலாளர்களில் பெரும்பாலானோர் புலம்பெயர் தொழிலாளர்கள். தொடர் வறுமை, நிலையற்ற வாழ்க்கைச் சூழலில் வாழ்ந்து வந்த அவர்களின் சமூக பொருளாதார பாதிப்புகள் அந்த போராட்டத்தின் மூலம் வெளி வந்தது. இந்தியத் தொழிலாளர்களில் 90% பேர் அமைப்புசாரா தொழிலாளர்களாக உள்ளனர். பெரும்பான்மையோர் ஒப்பந்தத் தொழிலாளர்கள். குடும்பத்தோடு இவர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. கூலி திருடப்படுகிறது. பாதுகாப்பற்ற பணிச் சூழலால் மரணத்தை எதிர்கொள்கிறார்கள். பணிபுரியும் இடத்தில் இவர்களின் குடியுரிமை செல்லாததாக அறிவிக்கப்படும் போது, நீண்ட காலமாக சொந்த ஊர்களை விட்டு வெளியே இருப்பதால் அங்கும் கூட அவர்களது சமூக வேர்களும் குரல்களும் பலவீனமாகிப் போய்விட்டன. உலகம் முழுவதும் தேசப் பாதுகாப்பு என்ற பெயரில் புலம் பெயர் சமூகங்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

இந்தியாவில் தேசிய குடிமக்கள் பதிவேடு, வாக்காளர் தீவிர திருத்தம் போன்ற நடவடிக்கைகள் மூலம் இவர்கள் தங்களது வாக்குரிமையை இழக்கும் நிலையை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக வங்க மொழி பேசும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அதுவும் அவர்கள் முஸ்லிம்களாக இருப்பதால் சந்தேகத்துக்குரிய சமூகமாகப் பார்ப்பதும், அவர்கள் மீது தாக்குதலும் நடைபெறுகின்றன. அதுபோலவே பீகார், ஜார்க்கண்ட், வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் தாக்குதல்களை எதிர் கொள்கின்றனர்.

சமூக, பொருளாதார நிச்சயமின்மையும், அதோடு கூடவே, குடியுரிமை மீதான தாக்குதலும் சேரும் போது சமூக, அரசியல் என்ற பொருளில் பெரும் எண்ணிக்கையிலான இவர்களின் இடம் கண்ணுக்குத் தெரிவதில்லை. தங்களுக்குச் சொந்தமானது எது எனும் நெருக்கடியைச் சந்திக்கும் புலம்பெயர் தொழிலாளர்களின் உழைப்பு பொருளாதாரத்துக்கு மிகவும் மையமானதாக இருப்பது நகைமுரணாகும்.

இந்த மாநாட்டில் பேசிய சிபிஐ(எம்எல்) பொதுச் செயலாளர் திபங்கர், புலம்பெயர் தொழிலாளர்களை அமைப்பாக்குவது நமக்கு புதிய பணி அல்ல; ஆனால் தற்போதைய காலகட்டத்தில் அது இன்னும் அவசரமானதாகி உள்ளது என்றார். தொழிலாளர்களின் சொந்த மாநிலங்களிலும் அவர்கள் பணி புரியும் மாநிலங்களிலும் ஒரு ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

சிபிஐ(எம்எல்) கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் வினோத் சிங், பிற நாடுகளில் பணிபுரியும் நம் நாட்டு தொழிலாளர்களுக்கு நாம் உதவிக் கரம் நீட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

டெல்லியைச் சேர்ந்த தோழர் ஸ்வேதா ராஜ், நகர்ப்புற திட்டமிடல் குறித்த கேள்விகளை எழுப்பினார். எல்லா இடங்களிலும் மேம்பாலங்களும் சாலைகளும் கட்டப்படுகின்றன ஆனால் நகரத்தை உருவாக்கி இயக்கும் தொழிலாளர்கள் நகரத் திட்டமிடலின் ஒரு பகுதியாக கருதப்படுவதில்லை என்றார். ஒரு சிறிய அறையில் 10 அல்லது 12 தொழிலாளர்கள் தங்கும் நிலையில், அங்கு அவர்கள் ஒரே நேரத்தில் தூங்க வழி இல்லாததால் மாறி, மாறி தூங்கும் நிலையே உள்ளது என்று குறிப்பிட்டார். அவர்கள் குடியிருப்புகள் எந்த நேரமும் இடிக்கப்படலாம் என்ற அச்சுறுத்தல் நிலவுவதையும் சுட்டிக்காட்டினார். அடையாள ஆவணங்கள் இல்லாததால் பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் இலவச பேருந்துப் பயண வசதியைக் கூட இழந்துள்ளனர் என்றார். இவற்றோடு புலம்பெயர் தொழிலாளர்கள் ரேஷன் அட்டைகள் பெறுவதும் சிரமமான காரியமாக உள்ளது என்றார்.

பீகார் சட்டமன்ற உறுப்பினர் சந்தீப் சௌரவ், இவ்வளவு துன்பங்களுக்கு இடையிலும் புலம்பெயர் தொழிலாளர்களை பாஜக தன் வசப்படுத்தி வைத்துள்ளதை குறிப்பிட்டவர், நமது பாரம்பரிய ஆதரவு தளத்தின் சில பிரிவுகளும் கூட அந்த வலை பின்னலுக்குள் ஈர்க்கப்பட்டுள்ளன என்றார். ஆகவே, ஒரு அரசியல் இலக்கு சார்ந்த, அமைப்பு சார்ந்த விதத்தில் புலம் பெயர் தொழிலாளர்கள் திரட்டப்படுவது அவசியம் என்று குறிப்பிட்டார்.

ஏஐசிசிடியு துணைத் தலைவர் தோழர் கிளிஃப்டன் தனது உரையில், பொது முடக்கத்தின் போது ரயில் தண்டவாளத்தின் வழியே நடந்தே வீடு திரும்பிய தொழிலாளர்கள் ரயிலில் சிக்கி உயிரிழந்ததை நினைவு கூறும் வகையில் மே 7ஆம் தேதியை புலம்பெயர் தொழிலாளர் நாளாக கடைபிடிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார். புலம்பெயர் தொழிலாளர்கள் இன்னல்களை வெளிக்கொண்டுவர ஒரு வலுவான சமூக ஊடகக் குழு நமக்கு வேண்டும் என்றார்.

ஏஐசிசிடியு அகில இந்தியத் தலைவர் தோழர் வீ.சங்கர் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள், கண்ணியம், பாதுகாப்பு ஆகியவற்றுக்கான நீடித்த போர்க்குணமிக்க இயக்கத்தை நடத்த அழைப்பு விடுத்து மாநாட்டை நிறைவு செய்தார்.

ஒவ்வொரு மாநிலமும் தங்களது மாநிலத்தின் தேவைகளுக்கு ஏற்ற வடிவில் சொந்த அமைப்புகளை உருவாக்க வேண்டும். அவை தொழிற்சங்கம், மன்றம், அல்லது புலம்பெயர் தொழிலாளர் வலைப் பின்னல், ஆய்வு குழுக்கள் இன்ன பிற வடிவங்களில் இருக்கலாம். அவற்றை ஒன்றிணைக்கும் தளமாக புலம்பெயர் தொழிலாளர் உரிமைச் சங்கம் செயல்படும். இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல சட்டத் துறையினர் பிரிவு, ஆராய்ச்சி, ஆய்வுக்குழு, செயலகம் உள்ளிட்ட துணைக் குழுக்கள் உருவாக்க வேண்டும் எனவும்.





ஏஐசிசிடியு, அயர்லா, மற்றும் அய்லாஜ் ஆகியவை இணைந்து அந்தந்த மாநிலத்திற்கே உரிய கோரிக்கை சாசனத்தை உருவாக்கி பின்னர், அவை ஒருங்கிணைக்கப்பட்டு தேசிய அளவிலான சாசனமாக உருவாக்கப்படலாம். மே 7, 2027 தேசிய புலம்பெயர் தொழிலாளர் தினத்தில் பெங்களூருவில் தேசிய மாநாட்டை நடத்தி கோரிக்கை சாசனத்தை நிறைவேற்றலாம் எனவும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த 24 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவும் 7 பேர் கொண்ட ஒருங்கிணைப்பாளர் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து தோழர்கள் மோகன், ஜெயபிரகாஷ் ஆகியோர் ஒருங்கிணைப்புக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். ஏஐசிசிடியு பொதுச் செயலாளர் ராஜீவ் டிம்ரி மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். விவாதத்திற்கான தாளை தோழர் ஆகாஷ் முன் வைத்தார்.

மாநாட்டில் 12 மாநிலங்களைச் சேர்ந்த 140 பேர் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டிலிருந்து தோழர்கள் சந்தன், ஸ்ரீகாந்த், ஆர். மோகன் பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர். அவர்களை சென்னையில் புலம்பெயர் தொழிலாளர் அரங்க வேலைப் பொறுப்பாளர் அஷ்ரப் பேகம் வழி அனுப்பி வைத்தார். மாநாட்டுத் தலைமைக் குழுவில் தோழர் மோகன் இடம்பெற்றிருந்தார்.

**கோரிக்கைகளும் தீர்மானங்களும்**

✿அனைத்து புலம்பெயர் தொழிலாளர்களும் பணிக்கு ஆளெடுக்கும் இடங்களிலும் பணிபுரியும் இடங்களிலும் பதிவு செய்யப்பட வேண்டும். அந்தப் பதிவுகளில் முதன்மை வேலையளிப்பவர், பணியிட விவரம், கூலி விவரங்கள், முன் தொகை, குடியிருப்பு, அவசரகால தொடர்பு எண்கள் ஆகியவை இடம்பெற வேண்டும்.

✿ தொழிலாளர்களை ஏமாற்றுபவர்கள், அடைத்து வைப்பவர்கள், கூலித் திருட்டில் ஈடுபடுபவர்கள், கொத்தடிமை முறையில் தொழிலாளர்களை வைத்திருப்பவர்கள், குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கமர்த்துபவர்கள், பாதுகாப்பற்ற பணிச் சூழல், வன்முறையில் ஈடுபடுபவர்கள் ஆகிய ஒப்பந்தக்காரர்கள், வேலைக்கு ஆளை அனுப்பும் ஏஜெண்டுகள் ஆகியோர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

✿ தங்கள் நிறுவனத்தில் நடைபெறும் ஊதியம், பாதுகாப்பு, தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்ட மீறல்களுக்கு முதன்மை வேலையளிப்பவரே பொறுப்பு. ஒப்பந்ததாரர்கள், துணை ஒப்பந்ததாரர்கள் மீறலில் ஈடுபட்டாலும் முதன்மை வேலையளிப்பவரே பொறுப்பாக்கப்பட வேண்டும்.

✿ புலம்பெயர் தொழிலாளர்கள் தாக்குதலைச் சந்திக்கும் போதும், அவரது சுதந்திர இயங்குதலுக்கு தடை

விதிக்கும் போதும், அவரது ஊதியத்தைப் பிடித்தம் செய்வது, அச்சுறுத்துவது, துன்புறுத்துவது, சொந்த வீட்டுக்கு திரும்ப முடியாத தருணம், குழந்தைத் தொழிலாளர்களை, வளரிளம் பருவத்தினரை தீங்கு விளைவிக்கும் வேலைகளில் அமர்த்துவது ஆகிய தருணங்களிலும் அரசமைப்புச் சட்ட உறுப்பு 23, கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்புச் சட்டம் 1976, குழந்தை மற்றும் வளரிளம் பருவத்தினர் (தடை செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986 ஆகியவற்றைக் கறாராக அமல்படுத்த வேண்டும்.

✿ புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான குடியிருப்பு, குடிநீர், கழிப்பிடம், மருத்துவ வசதி, உணவிடம், ஓய்வறை, தங்கள் குடும்பத்தினரை தொடர்பு கொள்வதற்கான வசதிகள், தங்களது அடையாள அட்டைகளை தங்கள் பாதுகாப்பிலே வைத்திருப்பதற்கான உரிமை, சட்ட உதவி, சொந்த வீடுகளுக்கு திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடு, உழைத்த சம்பளத்தை திரும்ப பெறுவதற்கும் காயம் பட்டாலோ உயிரிழப்பு ஏற்பட்டாலோ அவருடைய மறு வாழ்க்கைக்கான ஏற்பாடுகள், அவர்கள் குழந்தைகளின் கல்வி ஆகியவற்றை உத்தரவாதம் செய்ய வேண்டும்.

✿ பணி செய்யும் நகரங்களில், மாநிலங்களில் புலம் பெயர் தொழிலாளர்களுக்கான மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதேபோல், அவர்கள் பணி செய்யும் இடங்களிலிருந்து சொந்த ஊருக்கு சென்று வருவதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

✿ சர்வதேச புலம் பெயர் தொழிலாளர்களுக்கு போதுமான பயணக் காப்பீடு வழங்கப்பட வேண்டும். பணி செய்யும் இடத்தில் விபத்து அல்லது மரணம் நேர்ந்தால் உரிய இழப்பீடு வழங்க வேண்டும்.

✿ மரண தண்டனை விதிக்கப்பட்டு மரணித்த ஒருவர் கூட கண்ணியமாக நடத்தப்பட வேண்டும் என இந்திய சட்டங்களும் இயற்கைநீதியும் சொல்கிறது. மாநிலத்துக்குள்ளோ, மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்தோ அல்லது நாடு விட்டு நாடு சென்றோ இறக்க நேரிடும் தருணங்களில் புலம்பெயர்ந்த தொழிலாளர் உடல் சொந்த ஊருக்கு கண்ணியத்துடனும் குறித்த காலக்கெடுவுக்குள்ளும் அவர்கள் குடும்பத்தினர் வசம் சேருவதை உறுதி செய்ய வேண்டும்.

✿ வாழ்க்கைக்கான ஊதியம், 8 மணி நேர வேலை, வார விடுமுறை, மிகை நேரப் பணிக்கு இரட்டிப்பு ஊதியம், தொழிலாளர் ஈட்டுறுதி, வருங்கால வைப்பு நிதி, பணிப் பாதுகாப்பு, தொழிற்சங்க உரிமை ஆகியவை கறாராக அமல்படுத்தப்படுவதையும் தொழிலாளர் பாதுகாப்புகள் விரிவுபடுத்தப்படுவதையும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் உத்தரவாதப்படுத்த வேண்டும். ஒப்பந்தக்காரர் ராஜ்ஜியம், பாதுகாப்பற்ற வேலை, சங்கமாக அமைப்பாவதை தடுக்கும் நடைமுறை ஆகியவை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

✿ மொழி, பிராந்திய அடையாளம், மதம், தேசியம் ஆகியவற்றின் அடிப்படையிலான புலம்பெயர் தொழிலாளர்களுக்கு எதிரான அனைத்து வகையான அன்னியர் வெறுப்பும் நிறுத்தப்பட வேண்டும்.. ஏதோ ஒரு காரணத்தினால் அவரது வாக்குரிமை பறிபோகும் நிலை வரும்போது, நடைமுறை சிக்கல், இடைவெளிகளை சரி செய்யும் விதம் சிறப்பு ஏற்பாடுகளை உறுதி செய்ய வேண்டும்.

-தேசிகன்

# ரெனால்ட்ஸ் தொழிலாளர் போராட்டம்



சென்னை இருங்காட்டுக்கோட்டை சிப்காட்டில் அமைந்துள்ள ரெனால்ட்ஸ் பேனா தயாரிப்பு ஆலையானது தொழிற்சங்கத்தை அனுமதிக்காத நிலையில், அந்த ஆலையில் உள்ள தொழிலாளர் குழுவின் ( works committee) 3 தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரிக்கையை எழுப்பிய காரணத்திற்காக 15 நாட்கள் கம்பெனிக்கள் வர தடை விதித்து நிர்வாகம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதை அறிந்த பணியில் இருந்த தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பணி நேரம் முடிந்தும் அவர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர். ஆத்திரமடைந்த நிர்வாகம் அடுத்த ஷிப்ட் பணிக்கு வந்த தொழிலாளர்களை கம்பெனிக்குள் அனுமதிக்கவில்லை. அதனால் ஒரு பிரிவு தொழிலாளர்கள் கம்பெனிக்குள்ளும் இன்னொரு பிரிவு தொழிலாளர்கள் கம்பெனிக்கு வெளியிலுமாக தங்களது நியாயமான கோரிக்கைகான போராட்டத்தைத் தொடர்கின்றனர். 19.9.2026 மக்கள் மாமன்றத்தில் நடைபெற்ற மாநில அளவிலான தூய்மைப் பணியாளர் கூட்டத்திற்கு பிறகு ஏஐசிசிடியு ஆலோசகர் எஸ்.குமாரசாமி, மாநிலத் தலைவர் கு.பாரதி, பொதுச் செயலாளர் க.ஞான தேசிகன் ஆகியோர் மாநிலத்தின் பல்வேறு முன்னணி தோழர்களுடனும் ஒருமைப்பாடு மன்ற முன்னணிகளுடனும் ஆலை வாயிலுக்குச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கு ஒருமைப்பாடு தெரிவித்தனர். உள்ளிருப்பு போராட்டத்தில் இருப்பவர்களுக்கு முதலில் உணவு வழங்க மறுத்த நிர்வாகம், பிறகு அவர்களின் உறுதியை கண்டு தனது நிலையை மாற்றிக் கொண்டு இப்போது உணவு வழங்கி வருகிறது.



# டாஸ்மாக்கும் தவெக அரசும்

இராமச்சந்திரன்

கடந்த திமுக ஆட்சியின் இறுதியாண்டில் தமிழ்நாட்டில் தேர்தல் வாக்குறுதிகளை மய்யமாகக்கொண்டு மக்கள் போராட்டங்கள் தீவிரம் பெற்றன. ஆனால், தவெக ஆட்சி பதவியேற்ற நாளிலிருந்தே எதிர்ப்புக் குரல்கள் எழுந்துவிட்டன. இன்னும் சரியாகச் சொல்வதெனில், பதவியேற்புக்கு முன்பே குதிரை பேரம் பற்றிய சர்ச்சைகள் துவங்கிவிட்டன. தவெக “மக்களின் தேர்தல் அறிக்கை 2026”இல், திருக்குறள் வழியில் அறத்தின் பாற்பட்டு “கண்ணியமான வாழ்வு மற்றும் சமூகப் பாதுகாப்பு” என்ற தலைப்பில் ‘ஆசிரியர், செவிலியர் உள்ளிட்ட அரசுப் பணிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தற்காலிகப் பணியாளர்கள் 5 வருடப் பணி அனுபவம் பெற்றதும், அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்யப்படுவார்கள்’ என்று சொல்கிறது; “இன்பம்” என்ற பிரிவின் கீழ் ‘மக்கள் அரசு: உண்மை மற்றும் நேர்மையான நிர்வாகம்’ என்ற தலைப்பின் கீழ் லஞ்சத்திற்கு எதிராக, சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனைக்கு எதிராக ஜீரோ சகிப்புத்தன்மை என்றும் வாக்குறுதி அளித்திருக்கிறது. தவெக அரசின் “100 நாள் ஆட்சி, ஒரு யுகத்திற்கான மக்களின் மனசாட்சி” என்று தமிழ், ஆங்கில நாளிதழ்களில் வெளியான முழுப் பக்க விளம்பரங்களில், ‘717 மதுபானக் கடைகள் மூடல்’, ‘போதைப் பொருள் ஒடுக்குவதற்கான 65 சிறப்பு அதிரடிப் படைகள்’ என்றெல்லாம் பெருமை பேசப்படுகிறது. ஆனால் கள யதார்த்தமோ வேறாக இருக்கிறது.

**தவெக வாக்குறுதியும் துரோகமும்**

பணி நிரந்தரம் கோரி டாஸ்மாக் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், செவிலியர்கள், மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் எனப் பல்வேறுபட்ட பிரிவினரும் போராடிவருகின்றனர். இந்நிலையில் 31.08.2026 அன்று சட்டப்பேரவையில் நடைபெற்ற மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அமைச்சர் விக்னேஷ் டாஸ்மாக் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு உள்ளிட்ட சில புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். ஊதிய உயர்வு ஏறத்தாழ 100% என்றாலும் கூட, 23 ஆண்டுகள் பணியாற்றியதற்குப் பின்னரும் அவர்கள் பெறுகிற தொகை ரூ.28,680/- முதல் ரூ.33,023/- வரை மட்டுமே; இதே கால அளவில் பணியாற்றுகிற தமிழ்நாடு அரசின் கடைநிலை ஊழியர் பெறுகிற ஊதியத்தில் இது ஏறத்தாழ 50% மட்டுமே. அரசு அறிவித்த இதரப் பயன்களும் கூட அவர்களுக்குச் சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டியவையே. முந்தைய அரசுகளைப் போலவே இந்த அரசும் பணி நிரந்தரக் கோரிக்கையை நிராகரிப்பதன் மூலம், கண்ணியமான வாழ்வுக்கான காலமுறை ஊதியத்தையும், ஓய்வூதியத்தையும் பணியாளர் உரிமைகளையும் மறுக்கிறது;

**தவெகவின் ஊழல் எதிர்ப்பு நாடகம்:**

டாஸ்மாக் பணியாளர்களுக்கு பெரும் சுமையாக உள்ள காலி மதுபாட்டிலைத் திரும்பப்பெறும் திட்டத்திற்கு எந்த மாற்று ஏற்பாட்டையும் இந்த அரசு செய்யவில்லை. தனியாரைப் பயன்படுத்தி இந்த வேலையைச் செய்யுமாறு வாய்மொழி உத்தரவை வழங்கியிருக்கிற நிர்வாகம், அந்தச் செலவினங்களுக்கு ஒரு பைசா கூட தருவதில்லை. இந்தத் திட்டத்திற்கு ஒரு கடைக்கு ஒரு மாதத்துக்கு ரூ.60,000 முதல் ரூ.90,000 வரை செலவாகிறது. இந்தச் செலவினங்களைச் சரிகட்ட மதுபானங்களை கூடுதல் விலைக்கு விற்க நிர்வாகமே தொழிலாளர்களை நிர்ப்பந்திக்கிறது. நிர்வாகத்தின் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி தொழிலாளர்கள் 10 ரூபாய் கூடுதலாக வாங்க வேண்டும் அல்லது அவர்கள் கையிலிருந்து செலவழிக்க வேண்டும். ஊதிய உயர்வாக வாங்கும் தொகை முழுவதும் அதற்கே போய்விடும். ஆனால் தொழிலாளர்களோ, பாட்டிலுக்கு 10 ரூபாய் வாங்க வேண்டாம். பணி நிரந்தரம் வேண்டும்; காலி மதுபாட்டில் திரும்பப்பெறும் திட்டத்திற்கு மாற்று ஏற்பாடு வேண்டும் என்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மதுக்கடைகளே வேண்டாம். எங்களுக்கு மாற்று வேலை வேண்டும் என்கிறார்கள்.

தவெக அரசின் அறிவிப்பில் ஊதிய உயர்வோடு சேர்ந்து, காலி மதுபாட்டில் பிரச்சனைக்கான தீர்வையும் டாஸ்மாக் தொழிலாளர்கள் எதிர்நோக்கியிருந்தனர்; ஜூன் மாதத்திற்குள் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் என்று வாக்குறுதியளித்த அரசு ஆகஸ்டு மாதம் முடிந்த பிறகும் கண்டு கொள்ளவில்லை. எனவே செப்டம்பரில் டாஸ்மாக் தொழிலாளர் போராட்டம் மீண்டும் வெடித்தது. பாட்டிலுக்கு 10 ரூபாய் வாங்கியதற்காக பணியிடை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து நடைபெறுகிற போராட்டம் என்று ஒருதலைபட்சமாக செய்திகள் பரப்பப்படுகின்றன. உண்மையில் காலி மதுபான பாட்டில் பிரச்சனைதான் இந்தப் போராட்டத்தின் மய்யமான அம்சம்; ஊதிய உயர்வாகக் கொடுத்ததை திரும்பப் பிடுங்குவதற்கு எதிரானதே இப்போராட்டம். ஊழலின் ஊற்றுக் கண் பெருமுதலாளிகள், ஆட்சியாளர்கள், அரசாங்க உயரதிகாரிகளின் முக்கூட்டில்தான் இருக்கிறது. அதற்கு எதிராக எதுவும் செய்யாமல் டாஸ்மாக் தொழிலாளரின் சம்பளத்தையும், குடிக்கு அடிமையானவரின் குடும்ப வருமானத்தையும் பிடுங்கிக் கொண்டு இரு பிரிவினரையும் மோதவிட்டு, தன்னை ஊழல்

எதிர்ப்புப் போராளியாகக் காட்டிக்கொள்கிறது தவெக அரசு.

டாஸ்மாக் தொழிலாளரின் போராட்டம் நீறுபூத்த நெருப்பாகவே இருக்கிறது. பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசு அலட்சியம் காட்டுமானால், போராட்டம் மீண்டும் வெடிக்கும்.

### போதையில்லாத் தமிழ்நாடு என்ற தவெகவின் வாய்வீச்சு:

டாஸ்மாக் தொழிலாளரின் போராட்டத்திற்கு அக்கம் பக்கமாகவே, டாஸ்மாக் கடைகளை மூடச் சொல்லி தமிழ்நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் மக்கள் போராட்டம் தொடர்ந்து நடந்துகொண்டேதான் இருக்கிறது. இந்தப் போராட்டங்களில் பெண்கள்தான் முன்னணியில் இருக்கின்றனர் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். கிருஷ்ணகிரியில் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு பெண் சொன்னார்: “ஒரே வார்த்தை, டாஸ்மாக் வேணாம்”. தவெகவின் தேர்தல் அறிக்கை, “முதலமைச்சரின் நேரடி கண்காணிப்பில் போதைப் பொருள் தடுப்புப் படை உருவாக்கப்படும். இதன் மூலம் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு போதைப் பொருள் பயன்பாடு அறவே நீக்கப்படும்” என்று சொல்லித்தான் பெண்களிடம் வாக்குகள் பெற்றது. தமிழ்நாட்டில் வன்முறைச் சம்பவங்கள், கொலைகள், பள்ளி, கல்லூரிகளில் கஞ்சாப் புழக்கம் அதிகரித்துக் கொண்டுதான் போகின்றன. கோவை கல்லூரி மாணவர் அமுதனும், திருவொற்றியூர் பள்ளி மாணவர் தனுசும் கொல்லப்பட்ட சம்பவங்கள் நிலைமையின் தீவிரத்தை வெளிப்படுத்துகின்றன. ஆனால் முதல்வர் விஜய், சட்டமன்றத்தில் “போதை என்ற மரத்தின் ஒருசில கிளைகளை வெட்டியிருக்கிறோம். போதை எனும் முழு மரத்தை வேரடி மண்ணோடு அகற்ற வேண்டும். அது, 100 நாட்களில் முடியும் பணியல்ல” என்ற விளக்கம் அளிக்கிறார். மதுவிலக்கு அமைச்சரோ தமிழ்நாட்டில் மதுவிலக்கு சாத்தியமில்லை என்கிறார். போதைப் பொருள் பட்டியலிலிருந்து டாஸ்மாக் மதுபானங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுவிட்டது போலும்.

மதுவிலக்கு சாத்தியமில்லை என்பதற்கு கள்ளச்சாராயம் துவங்கி, சங்க கால இலக்கியம், உலக நாடுகளின் அனுபவங்கள் எல்லாவற்றிலிருந்தும் வாதங்கள் வைக்கிறார்கள். மதுக்கொடுமையால் பாதிக்கப்படும் பெண்கள், குழந்தைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்களை பற்றி தேர்தலுக்கு முன்பு பேசிய விஜய் ஆட்சியில் அமர்ந்தவுடன் மாற்றிப் பேசுகிறார். கொரோனா காலத்தில் மதுக்கடைகள் மூடப்பட்டிருந்தபோது பலரும் குடிக்காமல்தான் இருந்தனர். மக்களை மத போதை, மது போதையில் வைத்திருப்பது கார்ப்பரேட் சார்பு ஆட்சியாளர்களுக்குத் தேவையாக இருக்கிறது.

நாட்டு விடுதலைக்குப் பிறகு இந்தியாவில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்திய இரண்டு மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. கருணாநிதி ஆட்சிக் காலத்தில் 1971இல் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு மீண்டும் 1974இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இன்று தமிழ்நாட்டில் பெரும் பிரச்சனையாக உருவெடுத்திருக்கிற டாஸ்மாக் 1983இல் எம்ஜிஆரால் உருவாக்கப்பட்டது. 2003இல் ஜெயலலிதா டாஸ்மாக்கில் சாராய சில்லறை விற்பனையைத் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டில் எதிர்ப்புகளும் அப்போதிருந்தே துவங்கிவிட்டன. 2015இல் காந்தியவாதி சசிபெருமாள் மதுக்கடை எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்தபோது, மதுவிலக்கிற்கு ஆதரவான போராட்டங்கள் தீவிரம் பெற்றன. 2016 சட்டமன்றத் தேர்தலின்போது திமுக ஆட்சிக்கு வந்தால், முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்தவே தனது முதல் கையெழுத்து என்று அறிவித்தார் கருணாநிதி. மக்கள் போராட்டங்களை இறுமாப்புடன் அலட்சியப்படுத்தி, மதுவிலக்கு சாத்தியமில்லை என்று சட்டசபையில் அறிவித்த அதிமுக, தோல்வி பயத்தின் காரணமாக படிப்படியாக மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. தேர்தலில் அதிமுக வெற்றி பெற்ற பிறகு அடையாளப்பூர்வமாக 500 கடைகளை மூடிவிட்டு அமைதியாகிவிட்டது. அதற்குப் பிறகு அதிமுகவும், திமுகவும் மதுவிலக்குப் பற்றி பேசுவதைக் கூட நிறுத்திவிட்டன. இந்த நிலையில்தான் போதையில்லாத் தமிழ்நாடு என்று சொல்லி ஆட்சிக்கு வந்த விஜய் அரசு டாஸ்மாக்கை மூடுவதை சாத்தியமில்லை என்று அறிவித்துவிட்டது.

நான் ஊழல் செய்ய மாட்டேன். ஊழல் செய்பவர்களையும் விட மாட்டேன் என்று மோடி சொன்னதைக் கேட்டோம். இப்போது இதே வசனத்தை விஜய்யிடமிருந்து கேட்கிறோம். போதையில்லாத் தமிழ்நாடு என்று விஜய் தேர்தலுக்கு முன் சொன்னார். இப்போது போதையில்லா பாரதம் என்று மோடி சொல்கிறார். அமித்ஷாவும் சொல்கிறார். இந்த ஒற்றுமை தற்செயலானதுதானா? தனியார்மயமாக்கத்தில் தவெக அரசு முந்தைய திமுக அரசையும் தாண்டிச் சென்றுவிடும் போல் தோன்றுகிறது.

5 ஆண்டுகள் அரசுப் பணியில் அனுபவம் பெற்ற ஒப்பந்தப் பணியாளர் நிரந்தரம் செய்யப்படுவர் என்ற தவெகவின் வாக்குறுதியை, புதிதாக நியமனம் செய்யப்படும் பணியாளர் நிரந்தரப் பணியாளராக இருக்க மாட்டார்; அடுத்துவரும் 5 ஆண்டுகளுக்கு, அதாவது தவெக ஆட்சி முடியும் வரை ஒப்பந்த தொழிலாளராக அனுபவம் பெற வேண்டும் என்று புரிந்துகொள்ள வேண்டும் போலும்.

எப்படியாயினும், இடதுசாரிக் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், பெண்கள் அமைப்புகளும், குடிமைச் சமூகமும் முன்னெடுக்கும் போராட்டங்கள்தான் பணிநிரந்தரம், உண்மையான பொருளில் ஊழல் ஒழிப்பு, போதையில்லாத் தமிழ்நாட்டை யதார்த்தமாக்கும். ❑

# அகில இந்திய விவசாயிகள் மகாசபை 5வது தேசிய மாநாடு





அகில இந்திய விவசாயிகள் மகாசபையின் 5வது தேசிய மாநாடு செப்.20, 21 நாட்களில் நடைபெற்றது. மாநாட்டின் துவக்க நிகழ்வாக பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில், தேஷ் பக்த் யாதகர் ஹாலில், "விவசாயிகள் – தொழிலாளர்கள் ஒற்றுமை மாநாடு" செப்.20 அன்று சிறப்பாக நடைபெற்றது. பஞ்சாபைச் சேர்ந்த விவசாயி அமைப்பான 'ஜமூரி கிசான் சபா' (Jamhoori Kisan Sabha), (தோழர் பாஸ்லா தலைமையிலான ஆர்எம்பிஐ கட்சியின் விவசாய சங்கம்) ஏஐகேஎம் உடன் இணைந்து மாநாட்டை நடத்தியது. பல்வேறு மாநிலங்களில் இருந்தும் தோழர்கள் மாநாட்டில் பங்கேற்றனர். ஆர்எம்பிஐ கட்சியின் விவசாய சங்கத்தின் பஞ்சாப் மாநிலத்தில் இருந்து திரளான தோழர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். செப்டம்பர் 20, 21 தேதிகளில் நடைபெற்ற இந்த மாநாடு இவ்விரு அமைப்புகளுக்கும் இடையிலான ஒற்றுமை மாநாடாக திகழ்ந்தது. அகில இந்திய விவசாயிகள் மகாசபையின் தேசிய அமைப்புச் செயலாளர் புருசோத்தம் சர்மா வரவேற்புரை ஆற்றினார். தோழர் சத்னம் சிங் அஜ்னவாலா துவக்க உரை ஆற்றினார். ஜெகேஎஸ் பஞ்சாப் தலைவர்கள், ஏஐசிசிடியு தேசியப் பொதுச் செயலாளர் ராஜீவ் திம்ரி, அயர்லா தேசியத் தலைவர் சத்யதேவ் ராம், ஏஐகேஎம் தேசிய பொதுச்செயலாளர் ராஜாராம் சிங், எம்.பி., அய்சா ஆமீன், எஸ்கேஎம் தலைவர்களில் ஒருவரான டாக்டர் சுனிலாம் ஆகியோர் உரையாற்றினார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) விடுதலை பொதுச் செயலாளர் திபங்கர், ஆர்எம்பிஐ பொதுச் செயலாளர் மங்கத்ராம் பஸ்லா சிறப்புரை ஆற்றினார்கள்.

2வது நாள் மாநாடு, செப்டம்பர் 21ல் ஜலந்தரில் நடைபெற்றது. பல்வேறு மாநில பிரதிநிதிகளும் அரசியல் அறிக்கை, கொள்கை அறிக்கை, அமைப்புச் சட்டம் மீது கருத்துக்களை, பரிந்துரைகளை முன்வைத்துப் பேசினார்கள். சிபிஐஎம்எல் விடுதலை பொதுச் செயலாளர் திபங்கர், ஆர்எம்பிஐ பொதுச் செயலாளர் மங்கத்ராம் பஸ்லா எதிர்கால கடமைகளைச் சுட்டிக்காட்டி உரையாற்றினர். இறுதியில், ஏஐகேஎம் பொதுச்செயலாளர் ராஜாராம் சிங் தொகுப்புரை ஆற்றினார்.

மாநாட்டில் 152 பேர் கொண்ட தேசிய கவுன்சில் தேர்வு செய்யப்பட்டது; 57 பேர் கொண்ட தேசிய செயற்குழு தேர்வு செய்யப்பட்டது. பஞ்சாப் விவசாயிகள் தலைவர் தோழர். சத்னம் சிங் அஜ்னவாலா தேசிய தலைவராகவும், தோழர். புருசோத்தம் சர்மா பொதுச் செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

தியாகிகளின் கனவுகளை நிறைவேற்ற நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்! மிகப்பெரிய விவசாயிகள் அமைப்பாக வளர்த்தெடுப்போம்! விவசாயிகளை மென்மேலும் அணிதிரட்டுவோம்! இந்திய விவசாயம் மற்றும் விவசாயிகள் மீதும், நாட்டின் கூட்டாட்சிக் கட்டமைப்பின் மீதும் இதுவரை இல்லாத மிகப்பெரிய தாக்குதல் தொடுக்கும், பெருநிறுவன ஆதிக்கம் கொண்ட மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தை, பாசிச அரசை கட்டமைக்கும் மோடி அரசுக்கு எதிராக போராட்டங்களை வலுப்படுத்துவோம்!





# இந்திய பார் கவுன்சில் தலைவர் திரு. மனன் குமார் மிஸ்ரா பதவி விலகக் கோரி

# அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் எதிர்ப்பு நாள்







இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சூர்யகாந்த் மிஸ்ரா, இளைஞர்களைப் பார்த்து கரப்பான் பூச்சி என்றார். அதன் விளைவாக கரப்பான் பூச்சி கட்சி உருவானது. நீட் வினாத் தாள் கசிவும் அதைத் தொடர்ந்து நடந்த மாணவர்கள் தற்கொலையும் நீட் க்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்பலையை ஏற்படுத்தியது. டெல்லி ஜந்தர் மந்தரில் அய்சாவின் தேசியத் தலைவர் நேகா உட்பட பட்டினிப் போராட்டம் நடத்தினர். ஜுலை 20 நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடத்தவிருந்த நிலையில், மோடி-அமித்ஷா அரசு, அந்த மாணவர் - இளைஞர், பெண்கள் மீது காவல்துறை மற்றும் பாஜக குண்டர்களைக் கொண்டு கொடுந்தாக்குதலை நடத்தினார்கள். உலகமே இந்தக் கொடுமை கண்டு பதறியது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் இந்தக் கொடுமை பற்றி முறையிட்டு, நடவடிக்கை எடுக்க ஆதாரமாக இருந்த வீடியோகளைப் பார்க்க வேண்டுகோள் விடுத்தபோது, அதையெல்லாம் பார்ப்பதற்கு எங்களுக்கு நேரமில்லை என்று அலட்சியப்படுத்தினார் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த். அதனால், ஒவ்வொரு ஆண்டும் நடக்கிற பட்டமளிப்பு விழாவில், உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிதான் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் ஹைதராபாத்திலுள்ள நால்சார் சட்டப் பல்கலைக் கழகத்தில் (NALSAR) இம்முறை இந்த தலைமை நீதிபதி கலந்து கொள்ளக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தார்கள். அவ்வாறு எதிர்ப்பு தெரிவித்ததால், அந்த நால்சார் பல்கலைக்கழக சட்ட மாணவர்களை வழக்கறிஞராகப் பதிவு செய்ய அனுமதிக்கூடாது என தன்னிச்சையாக அறிவிப்பு செய்தார் இந்திய பார்கவுன்சில் தலைவர் மனன் குமார் மிஸ்ரா. இவர் பாஜகவின் சார்பாக நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினராக உள்ளார். தொடர்ந்து பல ஆண்டுகளாக முறைகேடுகள் செய்து விதிகளுக்குப் புறம்பாக பார் கவுன்சில் தலைவராக நீடித்துக் கொண்டிருக்கிறார். இவர் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன.

சட்ட விதிகளுக்குப் புறம்பாக தன் விருப்பம்போல், சட்டப் பல்கலைக் கழக மாணவர்களின் பதிவை நிறுத்தி வைக்க அறிவிப்பு செய்த, பல்வேறு ஊழல் குற்றச்சாட்டு களுக்குள்ளாகியுள்ள, இந்திய பார் கவுன்சிலின் சுதந்திரத்தன்மையை நீர்த்துப் போகச் செய்து வரும் இந்திய பார் கவுன்சில் தலைவர் திரு. மனன் குமார் மிஸ்ரா பதவி விலகக் கோரி 16.9.2026 அன்று நாடு தழுவிய எதிர்ப்பு நாளாக அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் (AILAJ) அறிவித்தது. அதற்கு மற்ற வழக்கறிஞர் சங்கங்களும் ஆதரவு அளித்தன. அதனை முன்னிட்டு 16.9.2026 அன்று நாடுமுழுவதும் வழக்கறிஞர்கள், சட்ட மாணவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். சென்னை உயர்நீதிமன்ற வாயிலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க தேசியக்குழு உறுப்பினர் உ.அதியமான் தலைமை தாங்கினார். வழக்கறிஞர்கள் ராஜசங்கர், எம்.சங்கர், சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். திருச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க தேசியக்குழு உறுப்பினர் கென்னடி தலைமை தாங்கினார். மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார், அகில இந்திய வழக்கறிஞர் சங்க மாவட்ட செயலாளர் கவின், வழக்கறிஞர்கள் அலெக்ஸ், ரங்கராஜன், ஞான தேசிகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வாயிலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க அகில இந்திய துணைத் தலைவர் ஜி.ரமேஷ் தலைமை தாங்கினார். சமூக நீதிக்கான வழக்கறிஞர் சங்கத்தின் ப.செந்தில்குமார் அகில இந்திய வழக்கறிஞர் சங்க மாநிலக்குழு உறுப்பினர் கு.பழனி, மாவட்டச் செயலாளர் அகஸ்டின், வழக்கறிஞர்கள் தமிழின வேந்தன், அருண்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# உழைப்போர் உரிமை இயக்கத்தின் மாநில ஊழியர் கூட்டம்





உழைப்போர் உரிமை இயக்கத்தின் மாநில ஊழியர் கூட்டம் 19.9.2026 அன்று திருப்பெரும்புதூர் மக்கள் மாமன்ற கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டம் துவங்கும் முன் உழைப்போர் உரிமை இயக்க மாநிலத் தலைவர் பாரதி கட்டிட வாயிலில் ஏஐசிசிடியு கொடியை ஏற்றி வைத்தார்.

கூட்டத்தில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கோவை, கடலூர், மயிலாடுதுறை, நாமக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, தர்மபுரி மாவட்டங்களிலிருந்து தூய்மைப் பணியாளர்கள்,தூய்மைக் காவலர்கள், மருத்துவமனை தூய்மைப் பணித் தொழிலாளர்கள் சங்க முன்னணிகள் கலந்து கொண்டனர்.

வந்திருந்த தோழர்கள் தங்கள் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் சந்திக்கும் பிரச்சனைகள் கோரிக்கைகள் போராட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

கலந்து கொண்டவர்களுக்கு தமிழ்நாட்டின் மூன்றடுக்கு ஊராட்சி நிர்வாகம் சம்பந்தமான பல்வேறு தகவல்கள் வழங்கப்பட்டன. கூடவே, தூய்மைப் பணியாளர் சங்கத்தை வளர்த்தெடுப்பதற்கான, விரிவுபடுத்துவதற்கான ஒரு அணுகுமுறைத்தாளும் கொடுக்கப்பட்டது.

தோழர்கள் ஜெயப்பிரகாஷ், சுரேஷ், ஏ கோவிந்தராஜ், மோகன், கே கோவிந்தராஜ், குட்டியம்மா, தென்காசிவேல்முருகன், தினகரன், ராஜகுரு , வீரச்செல்வன், சுந்தர்ராஜன்ஆகிய தோழர்கள் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர்.

ஏஐசிசிடியு மாநில பொதுச் செயலாளர் ஞான தேசிகன், மாநிலத் தலைவர் பாரதி ஆகியோர் உரையாற்றினர். ஆலோசகர் குமாரசாமி  கருத்துகளை முன்வைத்தார்.

கூட்டத்தில் மாநில இடதுசாரி கட்சிகள் பேரணிக்கு பிறகு, மாநில அளவிலான பிரச்சாரப் பயணத்தை மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. திருநெல்வேலியில் இருந்தும் கோவையில் இருந்தும் துவங்கும் வாகனப் பிரச்சாரம் மேற்கு மாவட்டங்கள்,டெல்டா மாவட்டங்கள் வழியாக சென்னை சென்றடையும். 2027 ஆம் ஆண்டு துவக்கத்தில் சென்னையில் பிரம்மாண்ட மாநாடு நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

# நெல்லை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் உழைப்போர் உரிமை இயக்கம்–ஏஐசிசிடியுவில் இணைந்தனர்

சுதந்திர சங்கமாக இயங்கி வந்த நெல்லை மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் கூட்டம் 17.9.2026 அன்று நெல்லை பாளையங்கோட்டையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அவர்கள் அனைவரும்   உழைப்போர் உரிமை இயக்கம் – ஏஐசிசிடியுவில் இணைந்து உறுப்பினர்களாகச் சேர்ந்து கொண்டனர். அக் கூட்டத்திற்கு இகக(மாலெ) மாநிலக் குழு உறுப்பினர் எம்.சுந்தர்ராஜ்  ஏற்பாடு செய்திருந்தார். கூட்டத்தில் ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் த.சங்கரபாண்டியன், மாநிலத் துணைத் தலைவர் ஜி.ரமேஷ், மாவட்டச் செயலாளர் கா.கணேசன் உரையாற்றினர். தூய்மைப் பணியாளர் சங்க நிர்வாகிகள் இசக்கிமுத்து, சிவராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர். மாநகராட்சி





MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17










Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai -** 600002. **Editor G.Ramesh**